விலை சதம் 5 | பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
8 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா " 12-00
1 வருடச் சந்தா " 24-00
மானேஜர்
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
Phone: 3411
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு ஐப்பசி மீ 8வ சனிக்கிழமை | Colombo, October 25 1947 | ஹிஜிரி 1366 வருஷம் | இதழ் 144

'பாலஸ்தீன பிரிவினை: அகில முஸ்லிம் உலகும் எதிர்க்கும்'

ஜனாப் ஜின்னா அறிக்கை

"இந்திய பிரிவினை ஏகாதிபத்தியத்தின் சதி"

பிரிட்டிஷ் கமியூனிஸ்ட் கட்சி உபதலைவர் விளக்கம்

சௌதாம்டன், அக். 23

இன்று இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் பிரிட்டனிலுள்ள சர்வ கலாசாலைகளில உயர்தரக் கல்வி பெற கப்பலில் வந்திறங்கிய 72 மாணவர்களை இந்தியா ஹைகமிஷனர் கிருஷ்ணமேனன வரவேற்றார். அவர் அவர்களை நோக்கிப் பேசிய போது பிரிட்டனில் கல்வி பயின்று இந்தியா திரும்பும போது இந்தியாவுக்குப் பயன்படும் தங்கள் புதிய அனுபவங்களுடன் திரும்புவார்கள் என தான் நம்புவதாகக் குறிப்பிட்டார்.

ஆசிய தொழில் மகாநாட்டின் பிரெஞ்சு பிரதிநிதி

பாரிஸ், அக். 23

பிரெஞ்சு தொழிலாளர் ஐக்கிய சங்கப பொதுக் காரியதாசி திரு. புஸாஸ்கட் புதுடிலலியில் நடைபெறும் ஆசியா தொழில் மகாநாட்டுக்கு விஜயம் செயய இங்கிருந்து நாளை புறப்படுகிறார். அவருடன் பிரெஞ்சு குடியேற்ற நாட்டு மந்திரி காரியாலயத்தைச் சேர்ந்த திரு. டொல்லட்டும் செல்கிறார்.

இந்தியாவின் எதிர்காலம்

லண்டன், அக் 24

லண்டனிலுள்ள இந்தியர் மாணவர் கூட்டத்தில பிரிட்டிஷ் கமியூனிஸ்ட் கட்சியின் உதவித் தலைவரான திரு ஆர். பால்மிதத்தா பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:- இந்தியாவிலும் பாக்கிஸ்தானிலுமுள்ள சோஷியலிஸடுகளும் கமியூனிஸ்டுகளும ஐக்கிய முற்றால் இரு நாடுகளில பல பிரச்னைகளையும் சுலபமாகத் தீர்த்து விடலாம். பிரிட்டிஷ் ஏகாதிபதியத்தின் 200 வருட ஆட்சியின் பயனாகவே நெருக்கடி ஏற்பட்டு இந்தியா பிளவுபட்டது. இந்தியாவிலுள்ள பிற்போக்குவாதிகள் ஆங்கில அமெரிக்க உதவியை நாடுகிறார்கள். ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் கூட பிரிட்டன் தானாக இந்தியாவுக்கு சுயராஜ்யம வழங்கியதாகப் பாராட்டிப் பேசினார். பிரிட்டன் தானாக சுயராஜ்யம் வழங்கவில்லை. இந்தியா சுயராஜ்யமடைவதை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசாங்கம் வேண்டுமென்றே 25 வருட காலமாகத தாமதப்படுத்தி நிலைமையை மோசமாக்கிவிட்டார்கள். தங்களால் ஆள முடியாதபடி நெருக்கடியான நிலைமை ஏற்பட்ட பிறகே அவர்கள் இந்தியாவைக் கைவிடும்படியாயிற்று. ஏகாதிபதிய வாதிகள் மீண்டும் இந்தியாவில் வாலாட்ட வசதியுண்டாக்குவதற்காகவே பிரிட்டன் இந்தியாவைப் பிளந்து விட்டுப் பின்வாங்கியது.

கல்கத்தாவில் வகுப்பு சமரசம் ஏற்படுத்தப்பட்டது அதே போன்று நாடெங்கும் சமரசத்தை நிலைநாட்ட முடியும். நாட்டைப் பாதுகாக்க ஐக்கிய முன்னணி ஏற்படுத்தப்பட வேண்டும். ஒற்றுமையால் தான் நாட்டைப் பாதுகாக்க முடியும் பிரிட்டனிலுள்ள இந்திய மாணவர்களுக்கு அதிக பொறுப்பு இருக்கிறது. பொய்ப் பிரசாரங்கள் இங்கு நடைபெறுவதைத் தோற்கடிக்க முயலுவதுடன் நீங்கள் பிரிட்டனிலுள்ள மக்களுக்கும் இந்தியாவிலுள்ள மக்களுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தப் பாடுபட வேண்டும்.

ஜனாப் ஜின்னா அறிக்கை

கராச்சி, அக். 23

பாக்கிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஜனாப் ஜின்னா பத்திரிகா நிருபரிடம் பின்வருமாறு தெரிவித்தார்:-

பாலஸ்தீனம் பிரிக்கப்படின் பெரும் போராட்டங்களும் பாதகங்களுமேற்படும். அதை முஸலிம் உலகமனைத்தும் எதிர்த்துப் போராடும். அப்பொழுது பாக்கிஸ்தான் அராபிய நாடுகளுடன் சேர்ந்து போராடும்.

இந்தியாவில் நடைபெறும் வகுப்புக் கலகம் முன்னேற்பாட்டாலேயே நடைபெறுகிறது. புதிதாக சிருஷ்டியான பாக்கிஸ்தானைத் திணறடிக்கவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதற்குப் பக்கபலமாகவுள்ள பெரிய பேர்வழிகளின் கதியைக் கண்டு பிடித்து அதை யொழிக்க இந்திய டொமினியன் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மைனாரிட்டிகளைப் பாதுகாத்து அமைதியை நிலைநாட்ட பாக்கிஸ்தானும் இந்தியாவும் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியாவிலுள்ள முஸலிம்கள் இவ் வேதனையான காலத்தை சமாளிப்பாராக. அவர்கள் துயரைக்கண்டு பாக்கிஸ்தான் சகித்துக் கொண்டு சும்மா இராது என்பதை அவர்கள் உணர்வார்களாக.

ஐக்கியத்திற்கு பாக்கிஸ்தான் சரணடையாதென்பதை நான் நிச்சயமாக அறை கூவுகிறேன். நிலைமையையறிந்தே இந்தியா பிரிக்கப்பட்டது. அது சரி என்பதை இப்பொழுது நடைபெறும் சம்பவங்கள் ருசுப்படுத்துகின்றன. பாக்கிஸ்தானிலுள்ள முஸ்லிமல்லாதவர்களனைவரையும் இந்திய டொமினியன் அழைத்துப் போவதிலிருந்து அது ஹிந்து அரசாங்கம் என்பது நிரூபணமாகிறது. காங்கிரசும் இந்திய டொமினியனும் வகுப்புக் கலகத்தைக் கிளப்பிய சீக்கியர்களையும் மற்றுமுள்ள சதி கோஷ்டிகளையும் ஒடுக்காவிடில் இந்திய சர்க்கார் ஒரு நாகரீக சர்க்காராகக் கருதப்படமாட்டாது.

(4-ம் பக்கம் பார்க்க)

ஆசிய வட்டாரத் தொழில் மகாநாடு

இலங்கைப் பிரதிநிதிகள் பயணம்

கொழும்பு, அக். 24

இன்று காலை ஆசிய வட்டாரத் தொழில் மகாநாட்டு இலங்கைப் பிரதிநிதிகள் விமான மார்க்கமாகப் புதுடில்லி புறப்பட்டார்கள்.

இம்மகா நாடு திங்கட்கிழமை ஆரம்பிக்கும் மகாநாட்டின் அரசாங்கப் பிரதிநிதிகள் எம். டபிள்யூ. எச். டி. சில்வா, கே. ஸி; பி. பொன்னையா, ஸி. ஸி. எஸ்; ஸி. எச் இஸட். பெர்னண்டோ; சிரில் டி. சொய்ஸா; ஜே. ஏ. டி. பெரேரா ஆகியோராவர். தொழிலாளர் பிரதிநிதியாக டாக்டர் ஸி ஜே. ஸி. டி சில்வா போகின்றார்.

வீட்டை எரித்தவருக்கு

மூன்று வருட நன்னடத்தைப் பிணை

சாவகச்சேரி, அக் 22

மீசாலை தெற்கு நாகமுத்து சின்னத்துரை என்பவர் நல்லதம்பி சாமிநாதர் வீட்டிற்கு நெருப்புவைத்தார் என்று தொடரப்பட்ட வழக்கு இன்று சாவகச்சேரி போலிஸ் கோர்ட்டில் விசாரணைக கெடுக்கப்பட்டு விசாரணை முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு மூன்று வருட நன்னடத்தைப் பிணையில் விடப்பட்டிருக்கிறார்.

(ந - நி)

சுப்ரீம் கோர்ட் புதிய நீதிபதி

கொழும்பு, அக். 25

இலங்கை சுப்ரீம் கோர்ட் நீதிபதி திரு. எச் எச். பஸநாயகாவை கவர்னர் நியமித்துள்ளதாக கவர்னர் காரியாலய அறிக்கையொன்று கூறுகிறது.

ஸகாட்லந்தில் வேலை நிறுத்தம்

லண்டன், அக். 23

நாலு நாளாக நடந்து வந்த ஸகாட்லந்து நிலக்கரித் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் முதலாவது உடைவு நேற்றிரவு ஏற்பட்டது. மொத்தம் 93 அரங்கங்களில் 12 சுரங்கத் தொழிலாளர் வேலைக்கு மீள்வதென வோட்டளித்திருக்கிறார்கள்.

அமெரிக்க விமானிகள் பூப்பிரதட்சணம்

கொழும்பு, அக். 24

ஜார்ஜ்ட்ரூமன், கிளிப் எவான்ஸ் என்ற இரு அமெரிக்க விமானிகளும் டோக்கியோவிலிருந்து ஹொக்கடேத் தீவுக்கு இன்று தமது விமானத்தில் புறப்பட்டார்கள். மேற்படி இருவரும் ஓர் விமானப் பூப்பிரதட்சணத்தல்கிளம்பியுள்ளார்கள். இதுவரை அவர்கள் பிரயாணத்தில் இல்லாத ஒரு பெரிய விமானப் பாய்ச்சலை அவர்கள் குறித்த தீவில் இருந்து செய்வார்கள் 1400 மைல் தொலையில் உள்ள அலுஷத் தீவுக்கு அங்கிருந்து அவர்கள் விமானமூலம் தாவுவார்கள் என்று அறியப்படுகிறது. (ராய்ட்டர்)

ரஸதாவை விட்டு லொறி விலகியது

விபத்தில் ஒருவர் மரணம்

கொழும்பு, அக். 25

கொழும்பு-புகதளம ரஸ்தாவில் 43-வது மைலுக்கு சமீபத்தில் நேற்று முன்தினம் நடுப்பகலில் ஒரு லொறி ரஸதாவை விட்டு விலகியதால் அதில் பிரயாணம் செய்த எம். பி. ஸெனிவிரத்தினா என்பவர் கொல்லப்பட்டும் கே. பி. ஸெனிவிரத்தினா படுகாயமடைந்தும் உள்ளனர் என்று கூறப்படுகிறது. லொறியின் டிரைவர் எம். பெர்னண்டோ என்பவரும் அவருடன் இருந்த வேறு ஒருவரும் காயமடைந்துள்ளார். காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர்.

காரில் வந்த கொள்ளைக் கோஷ்டி

கொழும்பு அக். 25

கொள்ளைப் பிட்டி லேனைச் சேர்ந்த எச். பர்வில் சிங்கோ என்பவர் ரூ 803-50 ரொக்கத்துடன் பஸஸில் கோட்டைக்கு வந்ததாகவும் பஸஸில் இருந்து இறங்கியதும் ஒரு காரில் வந்த கொள்ளைக் கோஷ்டி அவரை தங்களுடைய காருக்குள் கோட்டையிலுள்ள தந்திகாரியாலயத்துக்கு முன்னால் பலாத்காரமாக ஏற்றிகொண்டு சென்று பணத்தைப் பறித்துக் கொண்டதும் வியாங்கொடையில் அவரை இறக்கி விட்டதாகவும் இச்சம்பவம் மதியானம் 1-45 வரையில் சில நாட்களுக்கு முன் நடந்ததென்றும் தெரிவிக்கப்படுகிறது. புலன் விசாரணை நடைபெறுகிறது.

இந்தோ-சைனா யுத்தம்

தலைநகரைக் கைப்பற்றி கமியூனிஸ்டுகள் போர்

சைகோன், அக். 23

பிரெஞ்சு ராணுவ அறிக்கை தெரிவிப்பதாவது:- பிரெஞ்சுத் துருப்புகளுக்கும் வியட்நாம் துருப்புகளுக்குமிடையே மும்முரமான யுத்தம் நடைபெறுகிறது டொங்கின் மாகாணத்தின தெற்குப் பகுதியில் வியட்நாம் துருப்புகள் துரத்தப்பட்டன. அன்னாமில் நடைபெறும் போரில் ஏராளமான வியட்நாம் துருப்புகள் கைது செய்யப்பட்டன பிரெஞ்சு ஹை கமிஷனர் ஹானோயிலிருந்து சைகோனுக்குத் திரும்பினார்.

[ராய்ட்டர்]

தெருவில் சண்டை பிடித்தவர்கள்

ரூ. 20 அபராதம்

சாவகச்சேரி, அக். 22

சாவகச்சேரி வாசிகளாகிய ஆழ்வான் செல்லன், சின்னக்குட்டி கனகன் என்பவர்கள் தெருவில் சண்டை பிடித்தார்கள் என்று தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணை முடிவில் இருவரையும் குற்றவாளிகளாகக் கண்டு சாவகச்சேரிப் போலிஸ நீதிபதி ஒவ்வொருவருக்கும் ரூ. 20 அபராதம் விதித்தார். (ந - நி)

குற்றங்களைக் குறைக்க அடையாளச் சீட்டுகள்

ரயில்வே ஜெனரல் மானேஜர் நடவடிக்கை

கொழும்பு, அக் 25

ரயில்வே ஸ்டேஷன்கள் வளவுகளுக்குள் ரயில்வே அதிகாரிகளின் உத்தரவின்றி, அல்லது காரியாலய பதிக்கம்-(சின்னம்) இன்றி நிற்கும் நபர்களுக்கு தண்டனை விதிக்கப்படுமென்று ரயில்வே ஜெனரல் மானேஜர் ஒரு அறிக்கை விடுத்துள்ளதாக தெரிகிறது. அடையாளச் சீட்டுக்கள் வைத்திருக்காதவர்கள் ரயில்வே வளவுகளுக்குள் செல்லப் படாதென்று கூறப்படுகிறது. ரயில்வேயில் நடக்கும் களவு முதலிய குற்றங்களைக் குறைக்க இந்த அடையாளச் சீட்டு முறை ஏற்றதென்று கூறப்படுகிறது.

இலங்கையில் சீனி உற்பத்திக்கு திட்டம்

கொழும்பு, அக். 25

இலங்கையில் மிகப் பெரிய அளவில் கரும்பு உற்பத்தி செய்வதற்கு விவசாய இலாகா ஒரு திட்டமென்றை விரைவில் ஆரம்பிக்குமென்று அறியப்படுகிறது. இத்திட்டப்படி அடுத்த ஐந்து வருடங்களுக்குள் இலங்கை மக்களுக்குத் தேவையான சீனி உற்பத்தியை இங்கேயே செய்துகொள்ள முயற்சி செய்யப்படும் என்று கூறப்படுகிறது. இலங்கையிலே சீனி உற்பத்தி தொழிற்சாலை ஒன்றை ஸ்தாபிப்பதற்கு வேண்டிய விஷயங்களை கைத்தொழில் டைரக்டர் தயாரித்து வருவதாகத் தெரிகிறது.

இலங்கை ஒவ்வொரு வருடமும் ரூ. 75,000,000 மதிப்புள்ள சுமார் 70 000 டன் சீனியை இறக்குமதி செய்வதாகவும் இலங்கையின் தேவைக்குப் போதிய சீனியை உற்பத்தி செய்துகொள்ள இங்கு 40 000 முதல் 60,000 ஏக்கர் வரை கரும்பு உற்பத்திக்கு எடுப்பதுடன் ஐந்து முதல் எட்டு தொழிற்சாலைகளும் வேண்டுமென்றும் கைத்தொழில் டைரக்டர் தெரிவிக்கின்றார்.

மஞ்சூரிய யுத்தம்

பிரெஞ்சு ராணுவ அறிக்கை

நாங்கிங, அக். 23

மஞ்சூரியத் தலைநகர் சாங்சுன்னைப் பாதுகாக்க சீன சர்க்கார் துருப்புகள் கமியூனிஸ்ட் துருப்புகளை எதிர்த்து வருகிறார்கள். அதைக் கைப்பற்ற கமியூனிஸ்டுகள் சாங்சுன் - கிரின் ரயிலவே பகுதியில் மும்முரமான யுத்தம் செய்கிறார்கள்.

உணவு மருந்துவகை சட்டம்

கொழும்பு, அக். 25

உணவு-மருந்து வகைச் சட்டம் ஒன்றை அமுலுக்குக் கொண்டு வருவதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வரப்பட்டது. இப்பொழுது இச்சட்டத்தை படிப்படியாக ஒவ்வொரு பகுதியாக அமுலுக்குக் கொண்டுவருவதற்கு ஆலோசிக்கப்படுவதாக டாக்டர் எஸ். எப். செல்லப்பா தெரிவித்தார்.

ஐரோப்பிய மீட்சிக்கு இடைக்கால உதவி

அமெரிக்க மந்திரி சபையில் திட்டம் அங்கீகாரம்

நவம்பர் 17ல் காங்கிரஸ் கூடுகிறது

வாஷிங்டன், அக். 23

இன்று ஜனாதிபதி ட்ரூமனால் வெள்ளை மாளிகையில் அமெரிக்க மந்திரி சபையின் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது அங்கு ஜனாதிபதியின் இடைக்கால ஐரோப்பிய உதவித் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது.

ஐ. நா. சபையில் "யுத்தக் கூச்சல் இடுவதற்கெதிராக நடவடிக்கை" எடுக்கும்படி ரஷியா ஓர் ஆலோசனை கூறியதல்லவா? அதனை முற்றாக நிராகரித்து விடும்படி அமெரிக்கா சார்பில் செனேட்டர் வாரென் ஒஸ்டின் அரசியல் கமிட்டியில் பேசும் போது குறிப்பிட்டார். ஏனெனில் தணிக்கை அடக்குமுறை பற்றிப் பிரஸதாபிக்கும் சோவியத் ஆலோசனை நம் லட்சியத்திற்கு மாறுபட்டது. யுத்தத்தின் உண்மையான காரணங்களை நீக்கும் எமது அரசியல் கடமைகளில் இருந்து அது எம்மைப் பிய்த்தெடுக்கிறது. யுத்தத்தின் மூலகாரணம் துன்பம், நம்பிக்கையிழப்பு, பசி, தேகாரோக்கியமின்மை முதலியவையாகும். ஆகவே பொருளாதார சமூக அஸதிவாரங்கள் சரியாக்கப்பட்டால் தான் யுத்தத்தைத் தவிர்க்கலாம். இந்தத் துறைகளில் எல்லாம் ரஷியா பெரும்பான்மையானோருடன் ஒத்துழைக்க முன் வரவில்லை என்று அவரால் கூறப்பட்டது.

அமெரிக்க காங்கிரஸ் கூட்டம்

வாஷிங்டன், அக். 24

நவம்பர் 17ல் அமெரிக்க காங்கிரஸின் கூட்டமொன்றை ஜனாதிபதி ட்ரூமன் கூட்ட ஏற்பாடு செய்துள்ளார். பயங்கரமாக நாட்டில் விலைவாசிகள் உயர்வது சம்பந்தமாகவும், அயல் நாட்டு உதவியின் அவசர தேவை சம்பந்தமாகவும் இங்கு ஆலோசிக்கப்படும். இன்றிரவு அயல் தேசங்களின் நெருக்கடியில் உதவிசெய்ய அமெரிக்கர் செய்யவேண்டிய கடமைபற்றி ஜனாதிபதி ட்ரூமன் ரேடியோவில் பேசினார். (ராய்ட்டர்)

கார்-சைக்கிள்-ரிக்ஷா மோதுண்டன

மொரட்டுவை, அக். 24

மொரட்டுவை மெயின் வீதியில் சென். ஜோஸப் வீதி சந்தியில் ஒரு காரும், சைக்கிளும், ரிக்ஷாவும் மோதுண்டதால் சைக்கிளில் வந்தவரும் ரிக்ஷாவிலிருப்பவரும் பலத்த காயங்களுடன் லுனுவா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ரிக்ஷாவில் பிரயாணம் செய்த எச் எம். குணசேகரா என்பவர் ரிக்ஷாவில் இருந்து தூக்கி யெறியப்பட்டதால் சிறியகாயங்களடைந்தார். கார், சைக்கிள், ரிக்ஷா மூன்றும் சேதமடைந்துள்ளன.

செனட் சபைக்கு மேலும் மூவர் நியமனம்

கொழும்பு, அக் 25

இலங்கை செனட் சபைக்கு ஸர். ஏபிரஹாம் ஜெரூட் விஜயக்கன், ஸர். ஜோன் அலன் டார்பட், கர்னல் தோமஸ் ஜாட்ஸாட் ஆகிய மூவரையும் நியமித்துள்ளதாக கவர்னர் காரியாலய அறிக்கை ஒன்று கூறுகின்றது. இதுவரை மொத்தமாக 14 அங்கத்தவர்கள் கவர்னரால் நியமிக்கப்பட்டுவிட்டார்கள். இன்னும் ஒருவர் தான் செனட் சபைக்கு நியமிக்கப்படவேண்டும்.

ஹஜ்ஜிப் பெருநாள்

கொழும்பு, அக். 25

இன்று ஹஜ்ஜிப் பெருநாளை முஸ்லிம்கள் கொண்டாடுகிறார்கள். புதிய சோனகத் தெருவிலுள்ள பெரிய மசூதியில் காலை 7-45 மணிமுதல் 9 30 மணி வரை தொழுகை நடைபெறும்.

உங்கள் இடங்களின்
மங்கள சூரியன்
மெய்கண்டான்
திருக்குறட் கலண்டர்
தமிழ் டயறிகள்.
1948-ம் வருடத்து மங்களகரமான மெய்கண்டான் திருக்குறட் கலண்டர் தமிழ் டயறிகளுக்கு இப்பொழுதே எழுதுங்கள் பிந்தினால் கிடைப்பதரிது.
யுத்தகாலத்துக்கு முன் போல் பார்வைக்குகந்த அழகிய பெரிய தேதிகள் நல்ல கடுதாசி.
அன்பு. அறிவு. ஒழுக்கம். கடமை முதலியவற்றை விளக்கும் அரும்பெரும் நீதி வாக்கியங்கள் நிறைந்துள்ளது.
சில்லறை விலை விபரம்:
10X15 படத்துடன்
No. 1 சிவப்பு ரூ. 1-75
No. 1 கறுப்பு " 1-55
7X11 படத்துடன்
No. 2 முதுமொழி 0-85
டயறிகள்
No. 1 டயறி ரூ. 1-50
No. 2 டயறி " 0-85
வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் கிடைக்கும்
தொகைக்குத் தகுந்த கமிஷன் உண்டு.
மெய்கண்டான்
அச்சியந்திரசாலை,
மட்டுவில், சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 ஏ, நட்டாரத் தெரு, கொழும்பு. போன்: 3411.

சர்வஜித்து ஜூ ஐப்பசி மீ 8உ சனிக்கிழமை

சர்வாதிகார ஆட்சியா? டொமினியன் அந்தஸ்தா?

நானுன்னை மெய்ச்சிப்போற்றவும், நீ என்னைக் கனிந்து பாடவும் என்ற நிலையில் தான் பிரிட்டிஷ் அதிகாரவாககமும், திரு. டி. எஸ். சேனநாயக்காவும இன்று நடந்து கொள்ளுகின்றனர். இதன் பெறுபேறென்ன? இலங்கையர் என்றென்றும் பிரிட்டிஷாரின் கீழ் அடிமைகளாக இருப்பதே.

திரு. சேனநாயக்கா ஒருநாள் மாலையில் இதோ டொமினியன் அந்தஸ்து இலங்கைக்கு வழங்குவிக்கப் போகின்றேன் என்றார். அதே நேரத்தில் பிரிட்டிஷாரும் திரு சேனநாயக்காவின் அரசியல் ஞானசூன்யத்தை வானளாவப்புகழந்தார்கள். டொமினியன் அந்தஸ்துக் குடபட்ட பொறுப்பாட்சியை சீக்கிரத்தில் வழங்குவோம் என்றார்கள். இதைப் பார்த்திருந்த உண்மைத் தேசபக்தர்கள், அரசியல் அறிவாளிகள் இது டொமினியன் அந்தஸ்தல்ல இது போலி அந்தஸ்து என்றார்கள். இது திரு. சேனநாயக்காவின் காதல் விழவில்லை. பிரிட்டிஷ் புகழ்ச்சி பெருத்துவிட்டதல்லவா? இத்துடன் பிரிட்டிஷார் நின்றுவிடவில்லை. திரு. சேனநாயக்காவுக்கு இன்னும் குஷி ஏற்படுத்தினார்கள். பொதுத் தேர்தலில் யூ. என். பி. கட்சி தக்க ஆதரவைப் பெறுவிட்டாலும் கவர்னர் அவசரமவசரமாக திரு. சேனநாயக்காவைப் பிரதம மந்திரியாக்கினர். பிரதம மந்திரியார் பதவியாசை காட்டி பலரைத் தம பக்கம் இழுத்தார். இன்று குட்டிச் சர்வாதிகாரியாகி விட்டார். இதற்கு ஆட்சேபமேயில்லை. காரணம்? பிரதமமந்திரி நினைத்தால் உடனே மந்திரி சபையைக் கலைத்து வேறு மந்திரிகளை எடுத்துக் கொள்ள முடியும். ஆகவே மற்றும் மந்திரிகள் தொடை நடுக்கத்துடன் தான் இன்று இருக்கிறார்கள்.

இதை நேற்று லண்டனில் வெளிவந்த சுயேச்சைத் தொழிற் கடசிப் பத்திரிகையாகிய "சோஷயலிஸ்ட் லீடர்" நன்கு வெளிப்படுத்தி யிருக்கிறது. "இயற்கை அழகுடன் அமைக்கப்பட்டு ஐரோப்பிய சுரண்டுதலால் இலங்கை அழகுகுன்றிக காணப்படுகின்றது. பொதுவாக தூர கிழக்கலுள்ள நாடுகளைப்போல் மிகவும் நெருக்கடியான நிலைமையை அது எதிர்நோக்கி யிருக்கிறது. இலங்கையின் பொருளாதாரத்தின் மீது ஏகபோகமாக ஆதிக்கம் செலுத்தி நாட்டை வெகு காலமாகக் கஷ்டக்கிற்குள்ளாகி வந்திருக்கும் பெரிய தோட்ட முதலாளிகள் சிலர் சேர்ந்து ஏற்படுத்தும் ஒரு பிற்போக்கான சர்வாதிகார ஆட்சியின் கீழ் இருக்க நேரிடுமோ வென்ற நிலைமை இப்பொழுது புதிய 'டொமினியன்' நாடடிற்கு ஏற்பட்டிருக்கிறது" என அப்பத்திரிகை கூறுகின்றது.

பிரிட்டிஷ் பத்திரிகையின் கூற்றை நாம் பொருத்தமற்றதென நிராகரித்துவிட முடியாது. இன்று இலங்கையில் நடைபெறும் காரியங்கள் அத்தனையும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் இன்னுமொரு சேனநாயக்கா குட்டிச் சர்வாதிகாரம் ஏற்படுத்துவதாகவே அறிகுறிகள் காணப்படுகின்றன முடிபு புதிய பாராளுமன்றத்தால் நியமிக்கப்படும் பிரதிநிதிகளுடன் இலங்கை டொமினியன் அந்தஸ்து சம்பந்தமாக ஒப்பந்தப் பேச்சு வார்த்தைகள் நடத்தப்படுமெனக் கூறியது பிரிட்டிஷ் அரசாங்கம். ஆனால் இப்பொழுது பேச்சு வார்த்தைகள் இலங்கைப் பிரதிநிதிகளுடன் நடத்தப்படுவதாக சென்ற செவ்வாய்க்கிழமை மன்னர் பிரான் தம் பிரசங்கத்தில் குறிப்பிட்டுள்ளார். யாருடன் நடத்துகிறார்கள்? யார் இலங்கைப் பிரதிநிதிகள் என்பது அறிவிக்கப்படவில்லை. திரு. சேனநாயக்காவுடன்தான் இப்பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவதாக பலத்த வதந்திகள் உலாவுகின்றன திரு. சேனநாயக்காவுடன் பிரிட்டிஷ் அரசாங்கப் செய்துகொள்ளும் எத்தகைய ஒப்பந்தங்களும் இலங்கை மக்களைக் கட்டுப்படுத்துவதாகாது போலி அந்தஸ்தை இலங்கை மக்கள் ஏற்கவும் தயாரில்லை என்பது வெள்ளிடைமலை.

இச் சமயத்தில் பாராளுமன்ற எதிர்க்கட்சியினர் சும்மா விருத்தல் கூடாது சென்ற 150 வருடங்களாக பிரிட்டிஷாரின் கீழ் அடிமைகளாக இருந்திருக்கிறோம். மீண்டும் அவர்களின் அடிமையாகிய சேனநாயக்காவுக்கு அடிமைகளாக இருக்க இலங்கை மக்கள் விரும்பமாட்டார்கள் நிலைமையை தெளிவுபடுத்த வேண்டியது எதிர்க்கட்சியினர் கடமையாகும்.

இலங்கை வாழ் இந்தியர்கள்

குறை தீரும்வரையே தனி ஸதாபனம்

இலங்கை இந்தியன் காங்கிரஸ பிரதிநிதிகள் பேச்சு

கம்பளை, அக். 24

நாரனை, கொட்டகலை, நாவலப்பிடடியா தொகுதிகளின் பிரதிநிதிகளான திரு தொண்டமான், திரு குமாரவேலு, திரு ராஜலிங்கம் ஆகிய மூவரும் அவர்கள் கல்வி கற்ற பழைய பாடசாலையான சென் அன்டரூஸ கலலூரிக்கு தேர்தலின் பின் விஜயம் செய்தபோது அவர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டது. பாடசாலை அதிபர் இவர்களை வரவேற்றார். அங்கு கூடியிருந்தவர்களுக்கு முன மூன்று அங்கத்தினரும் பேசுகையில் மக்களுக்கு தாங்கள் சேவை புரிவதே நோக்கமாகக் கொண்டிருப்பதாகக் கூறினார்கள்.

தேசத்தின் விவகாரங்களில் கலந்துகொள்ளவிடாது அலட்சியம் செய்யப்பட்ட மக்களைப் பாதுகாப்பதற்காகவே இலங்கை இந்தியன் காங்கிரஸ ஸதாபிக்கப்பட்டதென்றும், இந்நிலையில் இது ஒரு வகுப்பு ஸதாபனமாக தோற்றக்கூடுமாயினும், மக்கள் அலட்சியம் செய்யப்படாது, தங்களுக்கும் அதற்காக பாடுபடவேண்டி யிருக்காது என்ற நிலை ஏற்படும் பட்சத்தில் இலங்கைஇந்தியன் காங்கிரஸ தனது வேலைகளைவிட்டு இலங்கையின நன்மைக்காகவே அதன அங்கத்தனர் தொண்டாற்றுவர் என்றும் அவர்கள் தொடர்ந்து பேசுகையில் கூறினார்கள்.

காலிரஸதாவில் கார் புரண்டது

ஐந்து பெண்கள் அபாயமின்றி தப்பினர்

கொழும்பு, அக். 25

காலி ரஸ்தாவில கல்கிசைப் பக்கமாக புதன்கிழமை இரவு சென்றுகொண்டிருந்த ஒரு அஸ்டின் கார் வெள்ளவத்தை ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் லேனுக்குச் சமீபதில புரண்டு விழுந்த அக்காரில் பிரயாணம் செய்த ஐந்து பெண்கள் தப்பிவிட்டனர். காரின் சாரதிக்கு மட்டும் சில காயங்கள் ஏற்பட்டுள்ளன.

கல்கிசைப் பக்கமாக சென்ற இக்காருக்கு எதிர்ப்புறமாக ஒரு கார் வந்ததாகவும் இரு கார்களும் மோதுண்டுவிடுமெனக் கண்ட டிரைவர் அதனை தவிர்க்க முயன்றதாகவும் அப்பொழுது கார் புரண்டுவிட்டதென்றும் தெரிகிறது. இச்சமயத்தில் பெரு மழைபெய்து கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

அசைஸ கோர்ட்டில் மணிக்கூடு களவு

நீர்கொழும்பு, அக். 24

நீர்கொழுமபு அசைஸ கோர்ட்டின் சுவரில் மாட்டப்பட்டிருந்த மணிக்கூடு திங்கட்கிழமை இரவு களவாடப்படடு விடடதாகவும் அதனால் புதிய மணிக்கூடு புதன்கிழமை கோர்டடில வைக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது.

சோஷியலிஸ்டு குடியரசுகள் யூனியனாக இந்தியா திகழவேண்டும்

பிளவுபட்ட இந்தியாவுக்காக நேதாஜி போராடவில்லை

ஆஜாத் ஹிந்த் சர்க்கார் பிரகடன 4-வது ஆண்டு விழாவில் ஸ்ரீ சரத் போஸ்

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குப் பதில் பணக்காரர் ஏகாதிபத்தியம் வந்து புகுந்துகொண்டது

யுவர்களுக்கு ஸ்ரீ ஷா நவாஸ் வேண்டுகோள்

கல்கத்தா, அக். 21

"என்னுடைய தாய் நாடு சோஷியலிஸடு குடியரசுகள் சேர்ந்த யூனியனாக இருக்க வேண்டுமென்று நான் கனவு கண்டு கொண்டிருக்கிறேன் இப்பொழுது நாட்டிலுள்ள எல்லா சக்திகளும், லடசியங்களும் ஒரே உலைப் பானையில், ஒன்று சேர்ந்து உருக்கி சேர்க்கப்படுவது போன்ற நிலைமையிலிருக்கின்றன. இவைகளெல்லாம் கடைசியாக ஒன்று சேர்ந்து ஓர் புதிய கோடபாடு உருவாகும். அது தேசிய சோஷியலிஸமும் கமியூனிஸமும் சேர்ந்ததாக இருக்கும்" என்று ஸ்ரீ சரத் சந்திரபோஸ், இன்று, ஆஜாத் ஹிந்த தற்காலிக சர்க்கார் பிரகடனம் செய்யப்பட்டதன் 4-வது வருஷாந்திர விழாக் கொண்டாட்டத்துக்கு தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார் மேலும் அவர் பேசியதாவது:-

இந்நாளின் முக்கியத்துவம்

1943-ம் வருஷத்து அக்டோபர் 21-ம் தேதி, எக்காலத்தும் மிகவும் முக்கியமான ஓர் நாளாக இருக்கும். இந்திய சுதந்திர சரித்திரத்துலே அது ஓர் புனித நாளாகும். அன்றுதான், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், சிங்கப்பூரில் ஆஜாத் ஹிந்த் தேசிய தற்காலிக சர்க்கார் பிரகடனஞ் செய்தார். அவருடைய சர்க்காரின் முதலாவது பிரகடனத்தையும் அன்றுதான் அவர் ஒலிபரப்பினார்.

டொமினியன் அந்தஸ்துக்கல்ல

டொமினியன் அந்தஸ்துக்கோ அல்லது பிளக்கப்பட்ட இந்தியாவுக்காகவோ நேதாஜி போஸும் அவருடைய சர்க்காரும் போரிடவில்லை. சுதந்திரம் பெற்ற ஒன்றுபட்ட இந்தியாவுக்குத்தான் அவர் போராடியது. உண்மையான சுதந்திரம் கிடைக்கும் வரை எல்லோரும் போரிடவேண்டும்

நேதாஜி போரிட்ட சுதந்திரமல்ல

இக்கூட்டத்தில் பேசிய ஆஜாத ஹிந்த் பௌஜைச் சேர்ந்த ஸ்ரீ ஷா நவாஸ் குறிப்பிட்டதாவது:-

இன்று நமக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டது ஆனால் அது நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ கனவு கண்டு, கடைசிவரை போரிட்ட சுதந்திரமன்று.

ஹிந்து, முஸ்லிம், சீக்கியர் முதலான எவ்வித ஜாதி பாகுபாடின்றி, எல்லோரும் தோளோடு தோள் சேர்ந்து போரில் ஈடுபட்டிருந்தனர். ஒரே இந்தியா, பிரிக்கப்படாத இந்தியா, இதே அவர்களுடைய லடசியமாயிருந்தது

ஆனால் இன்று நாம் காண்பதென்ன? சுதந்திரம் கிடைத்ததுடன் வகுப்புக் கலகம் ஆரம்பமாகியிருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபதயம் போய்விடடது ஆனால் அதற்குப் பதிலாக பணக்காரர்களின் ஏகாதிபதயம வந்துவிட்டது.

கிழக்கு ஆசியா பணக்காரர்கள் எல்லாம், தங்கள் தேச விடுதலைக்காக தங்கள் உடமைகள் எல்லாவற்றையும் இழந்துவிட்டனர். இந்தியா இன்று விடுதலையடைந்து விடடாலும் தேசத்தின் பணக்காரர்கள் பெரும் பணத்தைத் திரட்டுவதில் ஈடுபட்டிருக்கின்றனர்.

வகுப்பு வாதத்துக்கு எதிராக யுவர்கள் போராட வேண்டும்.

கூட்டத்துக்கு 50,000 ஜனங்கள் வந்திருந்தனர். இதில் எல்லாக் கட்சியினரும் கலந்திருந்தனர்.

"ஆராய்ச்சிகளின் முடிவுகள் பொதுஜன சொத்து"

ஸர். சி. வி. ராமன் பிரசங்கம்

தென்னிந்தியரின் அறிவு நுட்பம்

கோவை, அக். 18

நேற்று மாலை கோவையில் கூடிய தென் இந்திய வைத்தியர்கள் மகாநாட்டை ஸர். சி. வி ராமன் ஆரம்பித்து வைக்கையில், ஆராய்ச்சிகளின் முடிவுகள் பொதுஜன சொத்தென்றும் அவைகளை ரகசியமான முறையில் வைத்திருக்கக் கூடாதென்றும் கூறினார். இந்தியா சுதந்திர தேசமாகிவிட்டபடியால் ஆயுர்வேத ஆங்கில வைத்திய முறைகளுக்குள்ள வித்தியாசங்களைப்பற்றி அதிகப்படுததிக்கொண்டு போகவேண்டியதில்லை என்றும் வைத்திய ரசாயன ஆராய்ச்சிகளின் முடிவை அறிந்துகொள்வது அவசியமென்றும் நவீன ரசாயன அபிவிருத்தியை ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும் என்றும் இந்தியா முன்னேறறமடைய வேணடுமானால் ஆராய்ச்சி சக்தியை விருததி செய்துகொளளவேண்டும் என்றும் கூறினார். தென் இந்தியாவில் ரசாயனமுறையில் விசேஷ அபிவிருததி ஏற்படாமல் போனதற்கு நாம்தான் காரணம் என்பதாகவும் ஆராய்ச்சிக்கான வசதிகளை இங்கே செய்தால் வடநாட்டிற்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ செல்ல வேண்டியதில்லை என்றும் கூறினார். ஆராய்ச்சி செய்யக்கூடிய திறமைசாலிகள் தென் இந்தியாவிலும் இருக்கிறார்கள் என்றும், ஆராய்ச்சிக்கான சௌகரியங்கள் செய்து கொடுததால் வட நாட்டு ஆராய்ச்சிக்காரர்கள் தென் இந்தியர்களையே நாடும்படி செய்யக்கூடும் என்பதாகவும், மாகாண சர்க்காரும் இந்திய சர்க்காரும் உதவிசெய்ய வரவேண்டும் என்றும்கூறினார் மெடிக்கல் பொருள் காட்சியை ஸ்ரீ சி எஸ். இரத்தின சபாபதி முதலியார் ஆரம்பித்துவைதது இந்தியாவிலேயே எல்லா மருந்துகளையும் தயார் செய்யவேண்டிய அவசியததைப் பற்றியும் எடுத்துக் கூறினார்.

இலங்கை பெறவிருக்கும் டொமினியன் அந்தஸ்து

தோட்ட முதலாளிகளின் சர்வாதிகார ஆட்சிக்குட்படும்

பிரிட்டிஷ் பத்திரிகையின் கருத்து

லண்டன், அக். 23

'சோஷியலிஸட் லீடர்' என்னும் பிரிட்டிஷ் சுயேச்சைத் தொழிற் கட்சிப் பத்திரிகை பின வருமாறு எழுதுகிறது.-

பிரிடடிஷ் ஏகாதிபததியமானது இன்று நாலா பக்கங்களிலிருந்தும் பின் வாங்கிக் கொணடு வருகிறது. இதுவரை பிரிட்டிஷ் ஏகாதிபததியததில் சூரியன் அஸதமிககாதிருந்தது. ஆனால் இப்பொழுது அந்த சூரியன் கீழ் அஸதமிததுக் கொண்டு வருகிறது. பர்மா பரிபூரண சுதந்திரமடையப் போகிறது. இந்தியாவும் பாக்கிஸ்தானும் தங்களுக்கிஷ்டமான போது. பிரிட்டிஷ் சாம்ராயததிலிருந்து விலகிக் கொள்ளும்படி சுதந்திரமடைந்து விட்டன. அதனால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கிரீடத்திலுள்ள ரத்தினங்கள் யாவும் உதிர்ந்துபோக கிரீடம் வெறுமையாகி வருகிறது.

கடைசியாக இப்பொழுது பிரிடடிஷ் குடியேற்ற நாடான இலங்கையும் குடியேற்ற நாட்டு அந்தஸ்தைப் பெறப்போகிறது. இந்த இலங்கைத்தீவு இந்து மகாசமுத்திரததிலுள்ள ஓர் சுவர்க்க பூமி அது பூர்வீகமான பௌத்த கலாச்சாரத்தையுடையது. நன்கு பண்படுததப்பட்டுள்ள ரப்பர்-தேயிலைத் தோட்டங்களை யுடையது. அதன் சமீப கால அரசியல் சரித்திரத்தை நோக்கினால் இலங்கையானது, மிக அமைதியான அரசியல் போக்குடையதாக இருந்து வருவதை உணரலாம். உலகையே கிடுகிடுக்க வைத்த இந்திய தேசியக் கிளர்ச்சிகளைப் போல இலங்கையில் எதுவும் நடைபெறவில்லை. இயற்கையின் அருளால் மிக்க வனப்பு வாய்ந்ததும் ஐரோப்பிய முதலாளிகளால சுரண்டப்பட்டு வருவதுமான இந்த நாடு இப்பொழுது ஏனைய தூரகிழக்கு நாடுகளைப போன்று மிகவும் நெருக்கடியான நிலைமையிலிருந்து வருகிறது புதிதாக ஏற்பட விருக்கும் டொமினியன் அரசாங்கம் பிற்போக்குள்ள சர்வாதிகார ஆடசிமுறைக்குட்பட்டிருக்கக் கூடிய நிலைமை இருந்து வருகிறது. இதுவரை இலங்கையின் பொருளாதாரத்தைக் கைப்பற்றி அதை விடாப்பிடியாகப் பிடித்து ஏக போக ஆதிக்க உரிமை கொண்டாடிக கொண்டு நாட்டின் குரல் வளையை நெறித்து அதன் செல்வங்களை உறிஞ்சிவந்த பெரிய பணமுதலாளிகளும் பெருங்குடும்பத்தினரும் பெருந் தோட்ட முதலாளிகளுமான கோல்டியே புதிய டொமினியன் அரசாங்கத்தில் சர்வாதிகார ஆடசி நடத்து மென்று தெரிகிறது. (ராய்டடர்)

அந்நிய கம்பெனி பங்குகள்

பர்மா 60 சத விகிதம் கேட்கிறது

லண்டன், அக் 23

பர்மாவில் உள்ள பிரிட்டிஷ் கம்பெனிகளின் மூலதனத்தில் 60 சத விகிதம் பர்மியருக்கு இருக்க வேண்டுமென்ற கட்டாயம் பிரிட்டிஷ் பர்மிய உடன்படிக்கையில் இருக்கிறதாம். இந்தியா-பர்மா உடன்படிக்கையிலும் இதைப்போல ஒரு ஷரத்து இருக்கவேண்டுமென்று நேருவிடம் பர்மிய பிரதமர் வற்புறுத்தி யிருக்கக்கூடும். ஏனெனில் பர்மாவில் பிரிட்டிஷ் மூலதனம் இந்திய மூலதனத்தில் பாதிதான் இருக்கும் என நம்பப்படுகிறது.

ஹோலிவுட் நடிகர்கள் மீது வழக்கு

கமியூனிஸத்தைப் பரவச் செய்ததாக குற்றச்சாட்டு

சாப்ளின், காரி கூப்பர் முதலியவர்களுக்கு சமன்

வாஷிங்டன், அக். 21

கமியூனிஸத்தை அமெரிக்காவில் பரவச் செய்ய அமெரிக்க பிலிம் ஸதாபனம் உபயோகிக்கப்படுகின்றதெனக் குற்றச்சாட்டின் மேல் பிரபல நடிகர்கள் சிலர் மீது தொடரப்பட்ட வழக்கு இங்கு நடைபெற்று வருகறது. கலிபோர்னியாவிலிருந்து இவ்வழக்கு சம்பந்தமாக 18 பிரபல சினிமா நட்சத்திரங்களும் கதை எழுதுபவர்களும் டைரக்டர்களும் விமான மூலம் இங்கு கொண்டுவரப்பட்டனர்.

சார்லி சாப்ளின், மாண்ட் கோமரி, காரி கூப்பர், ராபர்ட் டெய்லர் இவர்களுக்குசம்மன்ஸ் பிறப்பிக்கப்பட்டது. பிரபல படத் தயாரிப்பாளர்களான சாம் கோல்ட்வின், வால்ட் டிஸ்னி, சாம்வுட் லூயிஸ, ஜாக் வார்னர் முதலியவர்களை எதிரிகளுக்காக சாட்சி கூறுமபடி அமெரிகக நடவடிக்கைக் கமிடடி உத்தரவிட்டிருக்கிறது.

சாப்ளின் கமியூனிஸட் என்று கூறுவதற்கு போதுமான அத்தாக்ஷி இல்லாமையால் அவரை இக்கமிட்டி தனக்குரிய சாட்சியாகக் கொள்ளவில்லை.

மோட்டார் விபத்தில் இந்திய சர்க்கார் அதிகாரி மரணம்

புதுடில்லி, அக் 21

இந்திய சர்க்காரின் டெபுடி பொருளாதார ஆலோசகரான ஸ்ரீ பி. என். அதார்காரும் அவரது மனைவியும் ஏறிச்சென்ற மோட்டார் நேற்றிரவு விபத்திற்குள்ளாகியது. ஸ்ரீ அதார்கார் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் படுத்துக் கொண்டிருக்கிறார். அவர் நிலைமையில் அபிவிருத்தி ஏற்பட்டு வருகிறது.

இவர்கள் ஏறிச்சென்ற காரை ஓட்டிய இந்திய சர்க்கார் பிரசார மந்திரி இலாகா அதிகாரியான ஸ்ரீ அரவிந்த்குஞ்ஜி விபத்தல் மாண்டார்.

பம்பாய் பிலிம் டெங்கில் பெரிய தீ

பக்கத்து கட்டிடங்களுக்கும் பரவியது

தீயணைக்கும் படையினர் உட்பட 3 பேருக்குக் காயம்

பம்பாய், அக் 22

பம்பாயின் மேற்கு மத்தியப் பகுதியில் டார்டியோ என்னுமிடத்தில் ஒரு பிலிம் கிடங்கில் இன்று காலை தீப்பிடித்துக் கொண்டதில் தீயணைக்கும் படையினர் இருவர் உட்பட மூன்று பேர் காயமடைந்தனர். இங்கு எரியும் தீ வெகு தூரத்திலிருந்து பார்க்க முடிந்தது. காற்றப் புகாதபடி சில் வைத்து வைக்கப்பட்டிருந்த பிலிம் பெட்டிகள் வெடிக்கவே அருகிலுள்ள ஒரு மாடி கட்டிடத்திற்கும் தீ பரவிற்று

ஒரு துணி அச்சிடும் பிரஸ, ஒரு வர்க்கக ஸ்தாபனம், ஒரு எண்ணெய் கிடங்கு ஆகிய மூன்றும் தீப்பிடித்து எரிந்தன. துணி பிரிண்டிங் பிரஸில் வேலை செய்யும் ஒரு சிப்பந்தி தீப்பிடித்துக்கொண்ட சமயம் இரண்டாவது மாடியிலிருந்தார் அவர் கீழே குதித்து தப்முயன்றதில் காயமடைந்தார். தீயை அணைத்த இருவர் காயமுற்றனர். காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்கள். போலிசார் சில ஸடீல் டிரங்குகளையும், பிலிம் வைக்கப்பட்டிருக்கும் பெட்டிகளையும் கைப்பற்றினர்.

பிரான்ஸின் புதிய மந்திரி சபை

பார்லிமெண்டில் புதுத் திட்டம் சமர்ப்பிக்கும்

பாரிஸ், அக். 25

பிரெஞ்சுக் குடியரசின் பிரதம மந்திரி பால் ராமடீர் மந்திரி சபையில் சில மாற்றங்களை செய்துள்ளார். 13 பேரைக் கொண்ட இம்மந்திரி சபை அடுத்த செவ்வாய்க்கிழமை பிரெஞ்சுப் பார்லிமெண்டில் ஒரு புதிய பொருளாதார நிர்வாகச் சீர்திருத்தத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும்.

பிரதமர் பத்திரிகை நிருபர்களிடம் உள்நாட்டுக் கொள்கையில் மாற்றம் எதுவும் ஏற்படாதுஎன்றும்ஆட்சி அதிகாரம் மட்டும இன்னும் சற்று பலப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

இப்புதிய அரசாங்கம் அதிக நாளைக்கு நீடிக்காது என்றே எண்ணப்படுகிறது.

இல்லையென்ற கொடுமை ஒழியவேண்டும்

"அரசியல் சுதந்திரத்தால் பயன் ஏற்படாது"

ஸ்ரீ வி. வி. கிரி கருத்து

சென்னை, அக் 21

ஜீவாதார உரிமைகள் நீங்கலாக பர்மா மக்களுக்கு வேலை செய்யாமை வாழ்வதற்கான உரிமை இவற்றிற்கு உததரவாதமளிக்காத வெறும் அரசியல் சுதந்திரம் முக்கியமானதல்ல ஏனெனில் அரசியல் சுதந்திரம் கொடுத்தும் கூட உலக சமுதாயத்திலுமஏற்பட்டுள்ள அதிருப்திகாரணமாகதொடர்ந்து அமைதியின்மைநீடிக்கவே செய்யும் ஏகாதிபத்தியத்திலிருந்து விடுபடும் அரசியல் சுதந்திரத்தை நோக்கி ஆசியா முன்னேறும் இத்தருணத்தில் பொருளாதார சுதந்திரம் (இல்லையென்ற கொடுமையை ஒழித்தல்) அளிக்கப்படுமென பாமரனுக்கு தெளிவான உத்தரவாதமளிக்கப்படவேண்டும் இதை உத்தேசித்தால் சர்வதேச தொழிலாளர் ஸதாபனத்தின் ஆசிய பிரதேச மகாநாடு இந்தியாவில் நடப்பது மிகவும் முகியம் வாய்ந்ததாகும்.

என்று தொழிலாளர் தலைவரும் இலங்கையில இந்திய சர்க்காரின் பிரதிநிதியாக இருப்பவருமான ஸ்ரீ வி. வி. கிரி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடுகிறார்.

ஸ்ரீ கிரி அடுத்த வாரம் டில்லியில் நடைபெற விருக்கும் ஆசிய பிரதேச தொழிலாளர் மகாநாட்டில் ஒரு பார்வையாளராகக் கலந்து கொள்கிறார்.

கிராம தொழிலாளருக்கு முக்கியத்துவம்

கொடுக்க வேண்டுமென சர்க்காருக்கு கோரிக்கை

கொழும்பு, அக். 25

உடுகம தொழிலாளர் விவசாயிகள் முன்னணியின் ஆதரவில் ஒரு பெரிய பொதுக் கூட்டம் டாக்டர் எஸ். ஏ. விக்ரமசிங்கா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாராளுமன்ற உடுகம அங்கததவர் திரு டி. எஸ். குணசேகரா, ஹக்மனை அங்கத்தவர் திரு வி. குமாரசிரி, தொழிலாளர் முன்னணியைச் சேர்ந்த திரு. ஆர். வி. டி. எஸ். விஜயநாயகா ஆகியோர் உட்பட பலர் பேசினார்கள்,

இக் கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன கிராமங்களில் சில புதிய ரஸ்தாக்கள் அமைக்கையில் கிராமத் தொழிலாளருக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேடடுக் கொள்வதாகவும் ஒரு தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இளவரசி திருமணத்துக்கு இலங்கைப பரிசு

கொழும்பு, அக் 25

இளவரசி எலிஸபெத்-பிலிப மௌண்டபேட்டன் திருமணத்துக்கு இலங்கை மக்களின் பரிசாக இலங்கையில அபூர்வமாகக் கிடைக்ககூடிய மரங்களைக் கொண்டு திறமானவேலைப்பாடுகளுடன் செய்யப்பட்ட நேர்தியான பொருட்களை கொடுப்பதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பொருட்களை விரைவில் செய்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்குக் கடிதம்

மன்னார் பிரதிநிதி ராஜிநாமா செய்வாரா?

ஆசிரியர், சுதந்திரன்
ஐயா,

பெருக்க தலையங்கத்துடன் லேக் ஹவுஸ் பத்திரிகைகளில் திரு. வி. சிற்றம்பலத்தின் நீண்ட கடிதம் பிரசுரிக்கப்பட்டிருந்ததை நான் படித்தேன். யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் திருவாளர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம், வி. சிற்றம்பலம் ஆகியவர்களுக்காக வேலை செய்தவர்களில் நானும் ஒருவனாக இருப்பதால் உண்மைகள் எது என்பது எனக்கு நன்றாகத் தெரியும் திரு. சிற்றம்பலம் உண்மையான விஷயங்கள் சிலவற்றை தெரிவித்திருப்பினும் அவர் கண்ணியமாகவோ கௌரவமாகவோ நடந்துகொண்டதாக சாதாரணமாக அக்கடிதத்தை படிப்பவர்கள் கூறமாட்டார்கள் "சுதந்திரன்" தமிழ்ப் பத்திரிகையில் விஷயங்களைத் திரித்து வெளியிட்டுள்ளதாக அவர் தமது கடிதத்தில் ஆரம்பிக்கின்றார் இனமும் 'சுதந்திரன்' பத்திரிகையை நான் படிப்பது வழக்கம் ஆனால் அதில் விஷயங்கள் ஆசிரியரால் திரித்து எழுதப்பட்டிருக்கவில்லை. இப்பத்திரிகையில் நிருபர்களால் எழுதப்பட்ட சில கடிதங்கள்தான் பிரசுரிக்கப்பட்டிருந்தன. இப்படியான கடிதங்களை எந்த நேர்மையான பட்சபாதமற்ற பத்திரிகையும் பிரசுரமாக்கவே செய்யும் ஆகவே காங்கிரஸ பத்திரிகை இதைப் பிரசுரித்தது

எடுத்ததுமுதல் தாம்மூன்றாக காங்கிரஸில் சேர மறுத்திருந்ததாக திரு சிற்றம்பலம் கூறுகின்றார். ஆனால் மன்னார் தொகுதிக்கு தாம் அபேட்சகராக நிற்பதாக திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் அறிவிக்க வேண்டுமென்று அவருக்கு நினைவூட்டியது ஏனென்பதுபற்றி அறிய முடியவில்லை. அவர் காங்கிரஸ கட்சியைச் சேராதவர் என்றால் ஒரு சுயேச்சை அபேட்சகரை கரிங்கிரஸ எவ்விதம் பிரகடனம் செய்ய முடியும்! மன்னாரில் காங்கிரஸ தனது கட்சி சார்பில் ஒருவரை திரு அளகக்கோனை நியமிக்க முயற்சித்ததில் என்ன பிழையிருக்கிறது? காங்கிரஸ தனது சொந்த அபேட்சகரை விட்டுவிட்டு சுயேச்சை அபேட்சகரை ஆதரிக்க வேண்டுமென திரு சிற்றம்பலம் கருத்தா? இந்தியாவிலிருந்து திரும்பிய திரு சிற்றம்பலம், மன்னார் தொகுதிக்கு காங்கிரஸால் தமது பெயர் அபேட்சகராக அறிவிக்கப்படவில்லையென்பதை அறிந்ததும், காங்கிரஸுடன் இருந்த எல்லாத் தொடர்புகளையும் அறவே நீக்கி ஒரு வித பொருத்தமற்ற கூட்டுறவையும் வைத்துக்கொள்ளாது சுயேச்சையாகவேபோட்டியிட்டிருக்கவேண்டியது அவரது கடமையாகும். மீண்டும் திரு ஜீ. ஜீ பொன்னம்பலம் அவாகளது உதவியை நாடி இருந்தால் அவர் 'தமிழ்க் காங்கிரஸ ஒரு வகுப்புவாதக் கட்சி. அதன் கொள்கைகளை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது அதன் அபேட்சகர்களை ஆதரிக்க நான் தயாராக இல்லை' என்று கூறி அத்துடன் விஷயத்தை முறித்திருக்கலாம் முக்கியமான பிரச்னைகளில் திரு. டி. எஸ். சேனநாயக்காவின் கொள்கைகளுக்கொப்பான-போக்குடைய புதிதாக அரசியலில் புகுந்த அரசியல்வாதி எவ்விதம் வகுப்புவாத ஸ்தாபனமென்று கூறும் தமிழ்க் காங்கிரஸின் தலைவருக்கு ஆதரவளிக்கும் ஒரு கூட்டத்துக்கு தலைமை வகித்தார் என்பது ஆச்சரியமாகவே இருக்கிறது. திரு சிற்றம்பலம் அவர்களின் எண்ணங்கள் செயல்கள் முதலியனவற்றில் சிறிது தடுமாற்றம் ஏற்படுதல் வேண்டும். இன்றேல் அவர் சமீபத்தில் கொழும்புக்கு விஜயம் செய்ததும் அவரது கருத்துக்கள் திடீரென மாறியிருக்க வேண்டும் மன்னாரில் உள்ள கத்தோலிக்க மக்களும் முஸ்லிம் மக்களும் காங்கிரசுக்கு மாறுனவர்கள் என்று கூறப்படுகிறது அப்படியாயின் அங்கு திரு. ஜீ. ஜீ பொன்னம்பலம் எவ்விதம் தமது செல்வாக்கை உபயோகித்து பயன் பெற முடியும்? மன்னாரில் திரு ஜீ ஜீ பொன்னம்பலம் ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் வரவேண்டுமென திரு சிற்றம்பலம் எதிர்பார்க்கவேண்டுமா? மன்னாரில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும், காங்கிரசும் செல்வாக்கை உபயோகித்து பயன் பெற்றதை முன்னைய சரித்திரம் கூறும். மன்னாரில் திரு தியாகராஜாவின் அரசியல்வாழ்க்கைக்கு ஊக்கமூட்டியவரும் திரு ஜீ ஜீ பொன்னம்பலம்தான். மன்னார் முஸ்லிம்களிடையே தமது செல்வாக்கை உபயோகித்து திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஆதரவைப்பெறவில்லை என்று கூறுவது சரியானதல்ல. திரு சிற்றம்பலத்தின் தேர்தலின்போது மன்னார் முஸ்லிம்களிடையே திரு. ஜீ ஜீ பொன்னம்பலத்துக்கு இருக்கும் அதிக செல்வாக்கை நான் நேரில் பார்த்தேன். மன்னார் பகுதியில் பிற்போக்கான பகுதிகளில் திரு தியாகராஜா புரிந்துள்ள சிறந்த வேலைகளையும்-ரஸ்தாக்கள், வைத்தியசாலைகள், கிராம ஆஸ்பத்திரிகள் முதலியனவற்றையும்-எனக்குத் தெரியும். சமீபத்தில் சர்க்கார் சேவையிலிருந்து ஓய்வெடுத்து அரசியல் அரங்கிற்குப் புதியவரான திரு. சிற்றம்பலம் மன்னாரில் உள்ளவர்களுக்கு திரு. தியாகராஜாவைப் போன்று சேவைகள் எதுவும் புரியவில்லை. மன்னாரிலே இவர் அதிகாரபூர்வமாக உதவி சர்க்கார் ஏஜண்டாக தமது கடமையை ஒழுங்காக ஆற்றியதற்கு அவருக்கு சம்பளம் கொடுக்கப்பட்டது. மன்னார் மக்களுக்கும் தேசத்துக்கும் அது ஒரு வித சேவையுமில்லை என்றே கூறவேண்டும். நல்ல சேவைகளைப் புரிந்த திரு தியாகராஜாவை மன்னார் மக்கள் புறக்கணித்தது, ஐக்கிய தேசியக் கட்சியை முறியடித்த திரு சேனநாயக்காவின் சர்க்காரையும் அழிக்க வேண்டுமென்பதே மறுக்க முடியாத உண்மையாகும்.

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடந்த தேர்தல்கள் யாழ்ப்பாண மக்கள் காங்கிரஸையே ஆதரிக்கின்றனர் என்பதை தெளிவுபடுத்தியுள்ளன. திரு சிற்றம்பலத்தின் சொந்த இடமான யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் காங்கிரஸ கட்சியை ஆதரித்ததினால் அவர்கள் திரு மகாதேவாவிலும் பார்க்க திரு பொன்னம்பலத்தை விரும்பியே வாக்குகளை அவருக்கு அளித்தனரே அன்றி திரு. சிற்றம்பலத்துக்காகவோ அல்லது திரு ஸி. பொன்னம்பலத்துக்காகவோ அல்ல. கால் நடைகளைப் போன்று வாக்களிக்கும் இடங்களுக்கு ஒழுங்கின்றி வாக்காளரைக் கூட்டிச்சென்று வாக்களிக்கும் காலம் மலையேறி விட்டது இன்று ஒவ்வொரு வாக்காளரும் தனது கடமையை அறிந்தே வாக்கை அளிக்க முன்வருகின்றார். தலைவர்களும் பெரிய மனிதர்களும் என்று கூறப்படுபவர்களின காலம் இதுவல்ல என்பதை சமீபத் தேர்தல் தெளிவாகக் காட்டியுள்ளது. திரு சிற்றம்பலம் யாழ்ப்பாணத்தில் அநேகமாக மக்களுக்குத் தெரியாதவர். இளமையிலேயே சொந்த இடத்தைவிட்டு வெளியேறி ராயல் கல்லூரி யூனிவர்ஸிடிக் கல்லூரி முதலியவற்றில் படித்து பின் ஸிவில் உத்தியோகப் பதவிக்காக இங்கிலாந்து சென்றவர். ஸிவில் உத்தியோகப் பதவி ஏற்றபின்னும் அவர் தமது ரஜாக்காலங்களை இங்கிலாந்து, பிரான்ஸ இந்தியா முதலிய இடங்களிலே கழித்தவர். இவரை மக்கள் சரியாக தெரிந்து கொள்ளவும் இல்லை. யாழ்ப்பாணத்தில் இவர் காங்கிரஸிற்காக வாக்குகள் சேகரிப்பது பயனளிக்கதிருக்க மாட்டாது. இவரது சொந்த உறவினர் திரு மகாதேவாவுக்கே வாக்குகளை அளித்தனர். சொந்த இடத்திலே திரு ஸி. பொன்னம்பலம்-நகர சபைத் தலைவர்-எவ்விதமாகவும் செல்வாக்கை உபயோகித்து பயன் பெறவில்லை அடுத்த தேர்தலில் இவர் தமது அர்பன் சபைத் தலைமைபதவியைதான் வகிப்பாரா என்பது சந்தேகத்துக்கிடமான விஷயமாகும். இங்குள்ள மக்கள் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் தமிழ் சாகியத்துக்கு ஆற்றியுள்ள சேவைகளை மதித்ததே அவருக்கு வாக்குகளை அளித்தனர்.

இன்றுள்ள இளைஞர்கள் எல்லோரும் இடதுசாரிக் கட்சியினரே எனபதையும் யூ. என். பியையும் திரு. சேனநாயக்காவின் ஆட்சியையும் ஒழிப்பதற்கு அவர்கள் சபதமிட்டுள்ளனர் என்பதையும் திரு சிற்றம்பலம் அறிவாரா? தமது அரசியல் கொள்கைகள் முக்கியமான விஷயங்களில் திரு. சேனநாயகாவின் கருத்துகளுடன் சம்பந்தப்படடுள்ளனவென்று ஆரம்பத்தில் திரு சிற்றம்பலம் தெரிவித்ததிருப்பாரானால் யாழ்ப்பாணத்திலிருந்து அவரது உறவினர் உட்பட ஒரு தொண்டர்களாவது அவருக்காக தேர்தலில் வேலை செய்யச் சென்றிருக்க மாட்டார்கள். கொழும்பிலிருந்து திரு சேனநாயகாவின ஆட்களையே அவர் தமக்காக வேலை செய்ய இறக்குமதி செய்திருக்க வேண்டியிருந்திருக்கும். இளைஞர்கள் மிக மோசமாக ஏமாற்றப்பட்டுள்ளனர். திரு. சிற்றம்பலம் வெளியிட்டுள்ள உண்மைகளை நோக்குமிடத்து திரு. ஜீ. ஜீ பொன்னம்பலமும் திரு. சிற்றம்பலமும் ஒருவருக்கொருவர் உதவி வேண்டி தம்முள் ஒழுங்குகள் செய்துகொண்டனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. இருவருடனும் வேலை செய்த நாங்கள் பலர் இந்த நெருங்கிய தொடர்பு கண்டு சந்தோஷப் பட்டோம். இத்தகைய பரிசுத்தமான தொடர்பு, பட்டம், பணம், பதவிக்காக தேர்தல் முடிந்ததும் முறியடிக்கப்பட வேண்டுமென்றால் அது

லொசிஞ்சர், டொபி, ஐசிங் சுகர்
இம்மூன்றிலும் முதல்தரமானது வேண்டுமென்றால்
குயின் (ராணி) மார்க்கே
பார்த்து வாங்குங்கள்



குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி
297 & 307 சீ ஸ்டிரீட் (செட்டியார் தெரு)
கொழும்பு
Phone: 4511 Telegrams:- "CONFECTION"

ஒரேயிரவத்தில் மூன்று குழந்தைகள்

ஆரணி, அக். 23

ஆரணிக்கு சமீபத்தில் உள்ள வடுகசாத்து கிராமத்தில் 5 தினங்களுக்கு முன்பு ஓர் குடியான பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள் பிறந்ததாகவும் அதில் 2 ஆண் 1 பெண் குழந்தை என்றும் எல்லாம் சௌக்கியமாய் இருப்பதாகவும் செய்தி கிடைத்திருக்கிறது அந்தஸ்திரீ மிகவும் ஏழை என்றும் தெரிகிறது.

ஆரணிக்கு 140 வயதுள்ள பெரியார் விஜயம்

சென்றவாரம் ஆரணி ஜில்லா முன்சீப்பை கண்டு பேச 140 வயதுள்ள ஒரு பெரியார் ஆரணிக்கு விஜயம் செய்தார் அவர் திடகாத்திரமாய் இருக்கிறார். அவர் ஒரு நல்ல வைத்திபர் என்றும் சொல்லப்படுகிறது.

மிகவும் துக்கரமான சம்பவமேயாகும். மன்னார் தேர்தலுக்கு முதல் மூன்று நாட்களுக்கு முன்னரே தமிழ்க் காங்கிரஸ தனது ஆட்களை மன்னாருக்கு அனுப்பி திரு. சிற்றம்பலத்துக்காக வேலை செய்துள்ளது. வாக்குச் சீட்டுகளை எண்ணும்போது திரு சிற்றம்பலத்தின் பிரதம ஏஜண்டாக திரு வி. குமாரசாமி (சாவகச்சேரி அகத்தவர்) இருந்துள்ளார். தேர்தலில் திரு. சிற்றம்பலம் வெற்றி பெற்ற அன்று பொது மேடையில் பேச்சுக்களை பேசியவர்கள் தமிழ்க் காங்கிரஸ தலைவரும் காரியதரிசியுமாகும் இதனால் பொதுமக்கள் திரு சிற்றம்பலம் சுயேச்சையாக இருந்தாலும் அவர் காங்கிரஸ காரர்தான் என்னும் அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தனர். புத்திசாலித்தனமான யாராயிருந்தாலும் சரி, அவர்கள் வேறு விதமாக நினைக்க முடியாது அவர் சொழும்புக்கு வந்தவுடன் எவ்விதம் முற்றாக யூ. என். பி காரரானார் என்றும் இதில் உத்தியோகஸ்தருடன் எவ்விதம் சேர்ந்தார் என்பதும் மர்மமான விஷயமாகும். தமிழ்க் காங்கிரஸ உச்சியில்லாதுபட்டால் வாக்காளர்களை வாக்களிக்கும் இடங்களுக்குக்கொண்டு சென்றிருக்க முடியாது. அவர்கள் தமது இடங்களில் பத்திரமாக இருந்திருப்பர். திரு. தியாகராஜா தேர்தலில் வெற்றியடைந்திருப்பார். யூ. என். பியையும் திரு. சேனநாயகா சர்க்காரையும் முறியடிக்கும்நோக்குடைய யாழ்ப்பாண மக்களுக்கு திரு. சிற்றம்பலம் ஒரு யூ. என். பி ஆதரவாளர் என்று தெரிந்திருப்பின் யாழ்ப்பாணத்தில் தமது இருப்பிடங்களை காட்டு, மன்னார் பகுதியில் திரு. சிற்றம்பலம் உல்லாசமாக வாடிவீட்டில் இருக்க அவர்கள் வந்து கிராமங் கிராமமாகச் சுற்றி திரிந்து கஷடப்பட்டிருக்க மாட்டார்கள் இலங்கைச் சரித்திரத்தின் முக்கியமான இக்கட்டத்தில் இலங்கைத் தமிழ் மக்கள், தமிழ்க் காங்கிரஸ் மூலமாக ஒரு ஐக்கிய முன்னணியை ஏற்படுத்தமுயற்சிகள் செய்யும்போது இடைஞ்சலை உண்டாக்கும் இரு எதிரிகள் இடையில்தோன்றியுள்ளது வருத்தத்தைக் கொடுக்கின்றது ஆனால் இவர்களும் விரைவில் ஒழிக்கப்படுவர். திரு. சிற்றம்பலம் தம்முடைய சொந்த மக்களையும் தமிழ்க்காங்கிரஸையும தமிழ் மக்களசமூகத்தையும தாழ்த்திவிட்டார். அவர் விரைவிலே தமது பாடத்தைப்படித்துக் கொள்வார்.

திரு. சேனநாயகா குரைக்கிற நாய்க்குஎலும்புத்துண்டை வீசிய மாதிரி இரு அற்ப மந்திரி பதவிகளை இருவருக்குக் கொடுத்து தமிழர்களைத் திருப்திபடுத்திவிட்டார்! இதைக்கண்டு ஏமாந்துபோகவேண்டாம். திருவாளர்கள்:மகாதேவா,நடேசன தியாகராஜா ஆகியோர் அடைந்த கதியை திரு சேனநாயக்காவின் மந்திரி சபையிலுள்ள தமிழ்ப் பிரதிநிதிகள் இருவரும் அடையும் நாளை திரு சேனநாயக்கா இருந்து பார்ககவேண்டுமென நான் கடவுளைப்பிரார்த்திக்கிறேன். திரு. சிற்றம்பலம் தமது கண்ணியத்தையும் கௌரவத்தையும் காட்டுமுகமாக மன்னார் தொகுதியின் பிரதிநிதி பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு முன் யூ. என். பி கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிடுவாரா?

ஏமாற்றமடைந்தோன்.
91, மேட்டுத் தெரு. கொழும்பு.

பிரிட்டனில் மேலும் சிக்கனம்

செலவில் வருடம் 25 கோடி பவுண் மீதமாக்க ஏற்பாடு

பார்லிமெண்டில் சர் கிரிப்ஸ் அறிக்கை

லண்டன், அக். 23

மன்னர் பிரசங்கத்தின் மீது எதிர்க்கட்சித தலைவர் சர்ச்சில் கொண்டுவந்த திருத்தப் பிரேரணை காமன்ஸ் சபையில் செவ்வாய் அல்லது புதன்கிழமை விவாதிக்கப்படும். இப் பிரேரணையை பிரிட்டிஷ் தொழிற்கட்சி அரசாங்கத்தின் மீது கொண்டுவரப்பட்டுள்ள கண்டனத் தீர்மானமென்றே சொல்லலாம்.

இன்று காமன்ஸ் சபையில் விவாதம் நடைபெற்றபோது பிரிட்டனை மட்டும் பாதுகாக்கும் கடற்படையைச் சர்க்கார் குறைக்கிறார்கள் என்பதன் காரணத்தை விளக்கமாகத் தெரிவித்தார். குறைக்கப்பட்ட படையை தேவைப்பட்ட நேரத்தில் பெருக்கிக்கொள்ளலாமென்றும் மத்தியதரைக்கடலிலுள்ள கடற்படை குறைக்கப்படவில்லையென்றும் பாதுகாப்பு மந்திரி அலெக்சாண்டர் தெரிவித்தார்.

இன்று பொருளாதார மந்திரி கிரிப்ஸ் பிரிட்டனில் மேலும் புதிதாக புகுத்தப்படும் சிக்கன ஏற்பாடுகளைத தெரிவித்தார். சீனி ஒரு நபருக்கு ஒரு வாரத்திற்கு 8 அவுன்சாகக் குறைக்கப்படும். மாட்டிறைச்சி வாரத்திற்கு ஒரு அவுன்ஸ் வீதமும் மற்ற இறைச்சி ஒரு ஷில்லிங் வீதமுமே இருந்துவரும். அமெரிக்க புகையிலை இறக்குமதி முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளது. மற்ற டாலர் சாமான்கள் இறக்குமதியில் மேலும் இரண்டரைக் கோடி பவுண் குறைக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்க இயந்திர உற்பத்திப் பொருளிறக்குமதியில் ஒரு கோடி பவுண் குறைக்கப்பட்டிருக்கிறது. எல்லாம் சேர்ந்து 6 கோடி பவுணுக்கு டாலர் மிச்சமாகும். மூலதனச் செலவினத்தில் 20 கோடி பவுண் குறைக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமான சிக்கனங்களால் பிரிட்டனுக்கு 25 கோடி பவுண் செலவினத்தில் மீதமாகும். அமெரிக்காவுகும் பிரிட்டனுக்கும் நடைபெறும் சமரச பேச்சு வெற்றிகரமாக முடியுமென்றும் கிரிப்ஸ தெரிவித்தார்.

பயங்கரச் செஞ்சட்டை மிருகம்

பிரஞ்சுக் கிராமத்தினரைப் பயமுறுத்துகிறது

பாரிஸ, அக் 23

கொரில்லாவை ஒத்த ஒரு வினோத மிருகம், பாரிஸிற்கு 25 மைல் தொலையில் உள்ள மெலுன் என்னும் இடத்துக்குச் சமீபத்தில் உள்ள கிராம வாசிகளைப் பயமுறுத்திவருவதாக ஒரு செய்தி கூறுகிறது. அப் பிராணியைக் கைப்பற்றும் நோக்கத்தோடு இன்று வேட்டைக்கோஷ்டிகள் பல அமைக்கப்பட்டிருக்கின்றன.

வனத்தினூடே பாய்ந்து சென்ற இம்மிருகத்தைச் சில குழந்தைகள் கண்டன. இம்மிருகம் காலில் சப்பாத்தும், சிவப்பு மேலங்கியும் அணிந்திருந்ததாகச் சொல்லப்படுகிறது.

மோட்டார்காரர்கள் கண்டனம்

லண்டன், அக். 23

மாதம் 300 மைல் உல்லாசப் பயணம் செய்ய வழங்கிவந்த பெட்ரோல் கூப்பன்களை சர்க்கார் ரத்து செய்ததைக் கண்டித்து லண்டன் மோட்டார் சொந்தக்காரர்கள் ஆர்ப்பாட்டம் செய்ய உத்தேசித்திருக்கின்றனர். ஹைட் பார்க்கில் நடைபெறும் இந்த கண்டனக் கூட்டத்தில் 10,000 மோட்டார்கள் அணிவகுத்து நிறுத்தப்படும். இன்றைய கூட்டத்தில் சர் மைல்ஸ தாம்சன் உட்பட பலர் பேசுவர்கள். (ராய்ட்டர்)

திருமணம்

நிகழும் சர்வஜித்கு ஆடு ஐப்பசி மாதம் 10-ம் தேதி (27-10-47) பிற்பகல் 3 மணியளவில் வருமகும்ப இலக்கின சுப முகூர்த்தத்தில் எனது புத்திரி

திருவளர் செல்வி புனிதவதி அம்மாளுக்கும்
திரு. வே. சின்னத்தம்பி அவர்களின் புத்திரன்
திருவளர் செல்வன் சிவசாமி அவர்களுக்கும்

திருமணஞ் செய்துவைக்கப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்திருமணம் எனது அன்பர்களும் சுற்றத்தவர்களும் குடும்ப சமேதராய் சமூகந்தந்து தம்பதிகளை வாழ்த்தியேகுமாறு வேண்டுகின்றேன்.

க. விசுவலிங்கம்.
[பருத்தியடைப்பு, இரண வைத்தியர்]
நாராக்குளம் ரோட், யாழ்ப்பாணம்.

"அமிர்த ப்ராஸ்" கருணைக்கிழங்கு லேகியம்.

நாட்டுக் கருணைக்கிழங்கும் அநேக உயர்தர மூலிகைகளும் சேர்ந்தது.
மூலமுளைகள், ரத்தம், சீழ்வடிதல், பவுத்திரம், வாய்வு,
மூல உஷ்ணம் சுகமாகும்.

24 நாள் அமிர்த ப்ராஸ் (காலை) ரூ. 4-8-0
" நாக பஸ்பம் (மாலை) " 5-0-0
மூலமுளைக் களிம்பு 1 புட்டி 1-0-0
(கேட்டால் இனாம்) வி. பி. செலவு ரூபா 1-8-0

தண்டபாணி வைத்தியசாலை,
பெரியகடை வீதி, பழனி. (S India)

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை.
புதிய மதுரமான முந்திரிகைப் பழங்களும் ஆப்பிள்களும் கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.
உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.
கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே எங்கள் பந்தோபஸ்தான அறைகளில் அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி சேகரிக்கப்படுகின்றது.
ஜி. ஸி. ரூேச் அன் கோ.,
மலிபான் தெரு,
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

மொத்த வியாபாரிகளுக்கோர் சந்தர்ப்பம்.
ஷாப்புச் சாமான்களில் உங்களுடைய தேவைகளுக்கு இலங்கையில் இறக்குமதியாளர்களில் முன்னணி வகிக்கும் எங்களை வினவிக்கொள்ளுங்கள். கீழ்க்கண்ட பண்டங்களில் நாங்கள் முக்கியத்துவம் பெற்றவர்கள்:-
லசிஞ்சர்ஸ், சாக்லேட்ஸ், இங்கிலீஷ் பிஸ்கட் நெனுகுகள், டின்பால் உணவுகள், டின் ஆகார வகைகள், இங்கிலீஷ் மருந்துகள், டொய்லட் தயாரிப்புகள், நூல் வகைகள், சிகரெட்டுகள், இன்னும் பலவித சாமான்கள்,
கவனிப்பு:-
அயலூர் வியாபாரிகள் மாதிரிப் பட்டியல் (Pro-forma Invoices) களுக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம்.
O. N. ASSEN MOHAMED & Co.,
Dam Street, COLOMBO.
Grams: "JUST" Phone: 4057

ஈகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்கு இணையற்றது
தாதுசத்துக்கள் நிறைந்த கீழ்க்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள்:—
ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
வினோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டீ ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்
தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு
ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த கட்டணம்! நிறைந்த பரிசு!!
கலை அறிவுப்போட்டி நிர். 1
ரொக்கப்பரிசு ரூ. 1200
முடிவு தேதி 10-11-47
நிபந்தனைகளுக்கும் இலவசக் கூப்பன்களுக்கும் உடனே எழுதுக
கலை அறிவுப்போட்டி நிலையம்,
பருத்தித்துறை.
Point-Pedro, (Ceylon)

போட்டி டிப்ஸ்
கலைஅறிவுப் போட்டி நிர். 1ன் விடை விமர்சனம் வெளிவந்துவிட்டது. தனிப் பிரதி சதம் 15. எல்லா இடங்களிலும் கிடைக்கும்.
Potti kolan Kariyalayam,
Udahendanna., S. P. O.

காட்டிலாகா அதிகாரி வழிமறைத்து தாக்கப்பட்டார்

நிலைமை அபாயகரமாக இருக்கிறது

மாத்தறை, அக் 24

மாத்தறை காட்டிலாகா பகுதியைச் சேர்ந்த அதிகாரியான திரு. மைக்கேல் சாப்மன் என்பவர் ஹொரகெட்டியாவிலிருந்து திரும்பிவருகையில் அகுருகொடாவிலே சுமார் 20 பேர்கள் கொண்ட ஒரு கோஷ்டியால் வழிமறிக்கப்பட்டு பலமாகத் தாக்கப்பட்டார்.

இவருடன் வந்துகொண்டிருந்த இரு காவற்காரர்களையும் இக் கோஷடியினர் தாக்கியதால் அவர்கள் ஓடிவிட்டனர். காட்டிலாகா அதிகாரியை இரக்கமின்றி இக்கோஷ்டியினர் அடித்துவிட்டு அவரைத் தூக்கி அருகேயிருந்த ஒரு நீரோடையில் எறிந்துவிட்டு சென்றுவிட்டனர். சிறிது நேரத்தில் திரு. சாப்மன் எழுந்து தமது மோட்டார் சைக்கிளில் மாத்தறைக்கு இரவு சென்றார். சுமார் 7 மைல் தூரம் காயங்களில் இருந்து இரத்தம் பெருகியபடியே இவர் சென்றார். காட்டிலாகா காரியாலயதிற்கு வந்து சேர்ந்ததும் இவர் மயக்கமடைந்து விழுந்துவிட்டார். பின்னர் அங்கிருந்த அதிகாரிகள் அவரை மாத்தறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். இவருடைய நிலைமை ஆபத்தானதாக இருப்பதாக கூறப்படுகிறது. போலிஸார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

இந்தோனேஷியாவில் டச்சு அநீதி

எல்லையை மீறி நகரைக் கைப்பற்றினர்

பட்டேவியா, அக் 23

இந்தோனேஷியா குடியரசு சர்க்காருக்கும் டச்சு சர்க்காருக்குமிடையேயுள்ள எல்லையை 6 மைல் தூரததிற்கப்பால் கடந்து டச்சுக துருப்புகள் கரஞ்சார் நகரைக் கைப்பற்றி 600 இந்தோனேஷியர்களைக் கொன்றனர். இந்நகரம் ஜோக்ஜகர்த்தாவிலிருந்து 60 மைல் தூரததிலிருக்கிறது. இவர்கள் பாதுகாப்பு கவுன்ஸிலின் 6 ஸதானிகர் கமிட்டியின் அறிக்கைக்குப்பின் இவ்வூருக்குத் திரும்பி வந்தார்கள்.

பிரிட்டிஷ் இந்திய ராணுவத்திலிருந்து ஓடியவர்கள் குடியரசுத் துருப்புகளுடன் சேர்ந்திருப்பதாக டச்சு அறிக்கை கூறுகிறது.

இந்தோனேஷிய சர்க்கார் எகிப்துக்கு 50 காலன் காலரா மருந்து அனுப்பத் தீர்மானித்திருக்கிறார்கள்.

இந்திய ஸ்தானிகர்

இந்திய ஸதானாதிபதி திரு என். ராகவன் பிரிட்டிஷ் விமானத்தில் இந்தோனேஷியக் குடியரசுத் தலைநகருக்கு நாளைப் பறந்து செல்கிறார். அவருடன் செல்லும் ஸதானிக அதிகாரி திரு. முகம்மது யூனுஸ் ஜோக்ஜகர்த்தாவில் தங்கியிருந்து நிலைமைகளை ஆராய்வார். அங்கு இனிமேல்தான் இந்திய ஸதானிகம் நிறுவப்படும். டச்சு கிழக்கு இந்திய தீவுகளுக்கு லெப்டினன்ட் கவர்னர் ஜெனரலுக்கு அடுத்தபடியாக திரு. அப்துல் காதிர் டெபுடி கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் இப்பொழுது அமெரிக்கா சென்றுள்ள டாக்டர் இடன்சர்க்கிற்குப் பதில் நியமிக்கப்பட்டிருக்கிறார். (ராய்ட்டர்)

திரு. பிலிப் குணவர்தனவின் சிறைத் தண்டனை

தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

கொழும்பு, அக். 25

பாராளுமன்றதகில் அவிசாவளை தொகுதிக்கு அங்கத்தவராக இருக்கும் திரு. பிலிப் குணவர்தனவுக்கு கொழும்பு தெற்கு மாஜிஸடிரேட் கோர்ட்டில் விதிக்கப்பட்டிருந்த மூன்று மாத சிறைத் தண்டனை அப்பீல் கோர்ட்டில் மீண்டும் ஊர்ஜிதம் செய்யப்பட்டதல்லவா? இப்பொழுது திரு. பிலிப் குணவர்தன பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்கின்றதை முன்னிட்டு அவருக்கு விதித்திருந்த தண்டனையை கவர்னர் தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளார் என்று அறியப்படுகிறது.

கவர்னர் இத்தண்டனை அமுலுக்கு வருவதை பிரிவி கவுன்ஸில் முடிவு தெரியும்வரை நிறுத்தி வைக்காதிருப்பின் இவர் முறைப்படி சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும். அதோடு இவரது அங்கத்தவர் பதவியும் பறிமுதல் செய்யப்பட்டிருக்கும். இததண்டனை தடுத்து வைக்கப்பட்டிருப்பதால் பிரிவி கவுன்ஸில் முடிவு தெரியும்வரை இவர் பாராளுமன்ற அங்கத்தினராக இருக்கலாம். அங்கு அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டு தண்டனை ஊர்ஜிதம் செய்யப்பட்டால் அவர்முறைப்படி சிறைத் தண்டனையை அனுபவிப்பதோடு தமது பதவியையும் இழக்கவேண்டி நேரும். அப்படியின்றி அங்கு இவரது தண்டனை ரத்துச் செய்யப்பட்டால் இவர் தொடர்ந்து அங்கத்தவராக இருக்கலாம்.

பணப்பையை பறித்தார்

எதிரிக்கு 9 மாத சிறைத் தண்டனை

கொழும்பு, அக். 25

கும்பனித்தெருவில் ஓரு பஸ்ஸில் பிரயாணம் செய்வதற்காக பஸ்ஸில் ஏறிக்கொண்டிருந்த பி. ஜி எம் குணசேகா என்பவரிடமிருந்து ரூ. 1100 ரொக்கமும், ரூ. 100 மதிப்புள்ள 6 பவுண்டன் பேனாக்களும் வைத்திருந்த ஒரு பேக்கைப் பறித்துக்கொண்டதாக குற்றம் சாட்டப்பட்ட கும்பனித்தெருவைச்சேர்ந்த டொன் சைமன் என்பவருக்கு கொழும்பு அடிஷனல் டிஸதிறிக் நீதிபதி திரு. வி. ஈ. ராஜகாரியர் 9 மாத சிறைத் தண்டனை விதித்தார்.

சைமனல் பறிக்தெடுக்கப்பட்ட பேக் விரைவில் திரும்ப எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் இருந்த பணத்தில் ரூ 470 குறைவாக இருந்ததாகக் கூறப்பட்டது.

பஸ் கம்பெனி டைரக்டர் ரூ. 1382 அபராதம் செலுத்தினார்

கொழும்பு, அக் 25

வடமேற்கு புளூ லைன் பஸ் கம்பெனி, கம்பெனிச் சட்டங்களுடைய கட்டுப்பாட்டுப்படி 1943, 1944, 1945-ம் வருடங்களின் வருடாந்தக் கணக்குகளைச் சமர்ப்பிக்கவில்லையென்று அக்கம்பெனி காரியதரிசி திரு. ஏ மீவனபாலனு மீது குற்றம் சாட்டப்பட்டு அவருக்கு தினமொன்றுக்கு 50 சத அபராதம் விதிக்கப்பட்டிருந்தது. அதன்படி இப்பொழுது 2764 நாட்களுக்கும் ரூ. 1382 அபராதமாக இவர் செலுத்தினார் இக்கம்பெனி டைரக்டர்களில் திரு. மீவனபாலனுவும் ஒருவராகும்.

30 குடும்பங்களுக்கு தலா 2 ஏக்கர் காணி

நீர்கொழும்பு, அக். 24

துனகஹா பகுதியில் காணியில்லாதவர்களுக்கு காணி கொடுக்கும் நோக்குடன் சர்க்காரால் எடுக்கப்பட்ட இட்டகொடெல்லா எஸடேட்டில் 30 குடும்பங்களுக்கு தலா இரண்டு ஏக்கர் வீதம் காணிகொடுக்கப்பட்டுள்ளது. இககுடும்பதினருக்கு இடங்கள் பிரித்து கொடுக்கப்பட்டுவிட்டன.

பர்மா சுதந்திர மசோதா

கல்கத்தாவில் தங்கின்று

லண்டன், அக். 23

இன்று பிரதம மந்திரி அட்லி பர்மா சுதந்திர மசோதாவை பார்லிமெண்டில் பிரேரேபித்தார். மசோதா முதல்தடவையாக வாசிக்கப்பட்டது. பர்மா பிரிட்டிஷ் சாம்ராஜயத்திற்குள் இருக்காதென்றும் அதன் பாதுகாப்புக்கு பிரிட்டன் பொறுப்பல்ல வென்றும் மசோதாவில் பர்மாவைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறது அதைப்பற்றி விவாதம நடைபெறவில்லை

காற்று மழையின் காரணமாக பர்மா பிரதம மந்திரி தக்கின்நு கல்கததாவில்தங்கியிருப்பதால் பர்மா சுதந்திர மசோதாவும் ஆங்கிலோ-பர்மா உடன்படிக்கையும் ரங்கூனிலும் லண்டனிலும் பிரசுரிக்கப்படும் தேதி தள்ளிப்போடப்பட்டிருக்கிறது.

மழையின் காரணமாக ரங்கூனிலிருந்து கல்கத்தாவுக்கும் சிங்கப்பூருக்கும் போகும் விமானங்கள் தடைப்பட்டன. பர்மா உள்நாட்டு விமானப்போக்குவரத்தும் தடைப்பட்டது.

ஒரு படகு கவிழ்ந்ததால் ரங்கூன் நதியில் 16 பிரயாணிகள் மூழ்கி மாண்டனர். டாக்டர் பாமா மந்திரி சபையில் மந்திரியாக இருந்து உசீன் மந்திரிகள் கொலை வழக்கு சம்பந்தமாக கைதியாகி யிருந்தவரை விடுதலை செய்யும்படி மனுச்செய்திருக்கிறார் பமாவின் டோபாமா கட்சியைச்சேர்ந்தவர்களனைவரையும் விடுதலை செய்யும்படி கோரி அக்கட்சி தீர்மானம் நிறைவேற்றியது.

பர்மாவின் பயங்காரக் குற்றங்களை ஒழிக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை வெற்றி யளித்துவருகிறது.

எகிப்தில் காலரா நிலைமை

கெய்ரோ, அக் 24

எகிப்திய காலரா நோயின் இரண்டாவது மாதம் நேற்று ஆரம்பித்தது. கடந்த 24 மணிநேயாலததில் மொத்தம் 853 சாவுகளும், 786 புதிய நோயாளரும் கண்டு பிடிக்கப்பட்டனர். சென்ற மாதம் 10 ஆயிரம் பேருக்கு நோய் கண்டு 3540 சாவுகள் ஏற்பட்டதாக அறியப்படுகிறது. 4 லட்சதது 20 ஆயிரம் பேருக்குப் பால் கட்டப் போதுமான 12, லட்சத்து 50 ஆயிரம் யூனிட் காலரா மருந்து பிரான்ஸால் எகிப்திற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. [ராய்ட்டர்]

யுத்த அங்கஹீனர் பிரச்னை

ஓர் ஆலோசனை

லேக் ஸக்ஸஸ், அக். 23

ஐ. நா சபையின் பாலஸ்தீன உப கமிட்டியில் ஒவ்வொரு மாதமும் 1500 ஐரோபபிய யுத்த அங்கஹீனர்களைத் தமது நாட்டில் குடியேற ஸ்தாபனத்தின் 57 அங்கத்தினரும் அனுமதிக்க வேண்டும்என்ற ஓர் ஆலோசனை கூறப்பட்டுள்ளது. மேற்படி ஆலோசனையைக் கூறியவர் சிரியாவைச் சேர்ந்த பாரிஸ் எல் கௌர் ஆகும். (ராய்ட்டர்)

மலேயாவின் புதிய அரசியல்

பார்லிமெண்ட் தூதுக்கோஷ்டி விஜயம் செய்யட்டும்

சிங்கப்பூர், அக் 23

அகில மலேயா ஐக்கிய முன்னணியான இடதுசாரிக் கட்சிகளின் ஐக்கிய ஸதாபனத்தார் கோலாலம்பூரிலிருந்து இன்று ஓர் அறிக்கை விடுதிருகின்றனர். பார்லிமெண்ட் தூதுக் கோஷ்டி ஒன்று மலேயாவந்து இங்குள்ள நிலைமைகளை அறிய வேண்டுமென்றும் புதிய அரசியலைத் திருத்த வேண்டுமென்றும் அந்த அறிக்கை கூறுகிறது. இந்த ஸதாபனங்களும் சீன வர்த்தக சங்கமும்தான் சமீபத்தில் புதிய அரசியலை ஆட்சேபித்து நாடெங்கும் ஹர்தாதால் நடத்தியது (ராய்ட்டர்)

'பாலஸ்தீன பிரிவினை: அகில முஸ்லிம உலகும் எதிர்க்கும்'

(1-ம் பக்கத தொடர்ச்சி)

காவல் படை

சிந்து சர்க்கார் காவல் படையை ஏற்படுததத ஒரு அவசரச் சட்டம் பிறப்பித்திருக்கிறார்கள். இப் படையினர் போலிஸாருக்கு உதவியாக நாட்டில் அமைதியை நிலைநாட்ட வேலை செய்வார்கள்.

பெரோஸ்கான் நூன்

இஸ்தான்புல், அக். 22

சர் பெரோஸ்கான் நூன் பாகிஸதான் கவர்னர் ஜெனரல் ஜனுப் ஜின்னாவின் நலெண்ண தூதராக மத்திய கிழக்கு நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து இப்பொழுது துருக்கியிலுள்ள இஸ்தான்புல் நகரக்கு வஜயம் செய்திருக்கிறார். இங்கு அவர் சிலகாலம் தங்கியிருப்பார்.

ஜப்பானில் இந்திய துருப்புகள்

டோக்கியோ, அக். 24

ஜப்பானில் மீதமுள்ள இந்திய துருப்புகள் இவ்வாரக் கடைசியில் இந்தியாவுக்குப் புறப்படடுச் செல்லும்.

சமஸ்தான பிரஜைகள் மகாநாடு

புதுடில்லி, அக் 22

அ. இ. சமஸதான பிரஜைகள் மகாநாட்டு நிரந்தரக் கமிட்டியை தலைவர் ஷேக் அப்துல்லா பின்வருமாறு மாற்றி அமைத்துள்ளார்:-

உபதலைவராக டாக்டர் பட்டாபி சீதாராமையாவும் பொதுக் காரியதரிசிகளாக பண்டித ஹீராலால் சாஸதிரி, ஸ்ரீமான்கள் சாரங்கதர்தாஸ, டி. எம் வர்கீஸ், ஜெயநாராயண் வியாஸ் ஆகியோரும், பொக்கிஷதாரராக ஸ்ரீ கமல நயன பஜாஜும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மெம்பர்கள் வருமாறு:- பண்டித ஜவஹர்லால நேரு. ஸ்ரீ சங்கரராவ்தேவ், ஆச்சாரிய நரேந்திரதேவ் ஸ்ரீ. ஜெயப்பிரகாஷ் நாராயண், ஸ்ரீமதி. கமலாதேவி, ஸ்ரீ. பலவந்தராம் மேதா, ஸ்வாமிராமானந்ததீர்த்தர் ஸ்ரீ. கோபிகிருஷ்ண வார்கியா, ஸ்ரீமான்கள் கே ஸி. ரெட்டி இக்கண்டவாரியர், குலாம் முகமது பக்ஷி பிரிஷ் பான்ஜ், கோகுல்பாய்பட், பி. வி. லக்காரே, பைஜ்நாத் மஹோதாயா.

இன்னும் ஒரு காலி ஸ்தானத்திற்கு பின்னால் மெம்பர் நியமிக்கப்படுவார்.

ஜுனாகத் சர்வஜன வோட் பிரச்னை

புதுடில்லி, அக். 22

பாகிஸதானில் ஜுனாகத் சேர்ந்ததுபற்றி எழுந்த தகராறில் மேற்கொண்டு யாதொரு விளைவும் ஏற்படவில்லை அச்சமஸதானததில் சர்வஜன வோட எடுக்க வேண்டும் என இந்திய சர்க்கார் விடுத்த கோரிக்கைக்கு பாகிஸதான் இன்னும் பதிலளிக்க வில்லை

கொச்சி மந்திரி சபை ராஜிநாமா செய்தது

எர்ணாகுளம், அக். 22

கொச்சி மந்திரி சபை இன்று ராஜிநாமாச் செய்தது. ராஜிநாமாவை மகாராஜா ஏற்றுக் கொண்டார். புதிய மந்திரி சபை அமைக்கப்படும் வரை இந்த சர்க்கார் இருக்கவேண்டுமென்று மகாராஜா உத்தரவிட்டார்.

பிரதம மந்திரி ஒரு அறிக்கையில் கூறுவதாவது:-

"இன்று காலை 11-30 மணிக்குஎனது ராஜிநாமாவையும்மற்றும 3 மந்திரிகளின் ராஜிநாமாவையும் மகாராஜாவிடமசமர்ப்பிததேன். அக்டோபர் 18-ம் தேதி மாலையில் ராஜேந்திர மைதானததில் சிலசம்பவங்கள் நடைபெற்றன. அந்த சம்பவங்கள்பற்றி உடனே பகிரங்க விசாரணை நடத்தி, குற்றவாளிகள் இருந்தால் அவர்களைத் தண்டிகக வேண்டுமென்பது எனது யோசனையாகும். இந்த யோசனையை மகாராஜா நிராகரித்து விட்டதால் நான் ராஜிநாமாச் செய்வதைத் தவிர வேறு வழியிலலை. கூட்டுப் பொறுப்பு சமபிரதாயம் இருப்பதால் இதர மந்திரிகளும் ராஜிநாமாச் செய்து விடடனர்.

புதிய மந்திரி சபை அமைக்க என்னைத் தவிர இதர கட்சித் தலைவர்களை அழைக்குமாறு மகாராஜாவுக்கு மணிவுடன் யோசனை கூறினேன். அப்படிச் செய்ய அவர் சம்மதித்து, அதுவரை நானும் எனது சகாக்களும் பதவியில் இருக்க வேண்டுமென்று உத்திரவிட்டிருக்கிறார்."

மைசூர் மந்திரி சபை

பங்களூர், அக். 22

மைசூரின் புதிய மந்திரி சபை 24-ம் தேதி விஜய தசமியன்று பதவி ஏற்கிறது. திரு. கே. சி. ரெட்டி மந்திரி சபை அமைக்க 9 மந்திரிகள் பெயர்களடங்கிய ஜாபிதாவை மன்னரிடம் சமர்ப்பித்திருக்கிறார்.

புதுச்சேரி இந்திய யூனியனுக்கு மாற்றப்படலாம்

லண்டன், அக். 21

புதுச்சேரியை இந்திய சர்க்காருக்கு மாற்றிக் கொடுத்துவிடுமபடி பிரெஞ்சு சர்க்காரை கேட்கும்படி, இநதிய சர்க்கார் லண்.னில் உள்ள இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ. வி. கே. மேனனுக்கு அனுபபியிருக்கும் கட்டளைப்படி, ஸ்ரீ மேனன் பாரிசுக்குச் சென்று, பிரெஞ்சு சர்க்காருடன் இது சம்பநதமாகச் சம்பாஷித்தார். பிரெஞ்சு சர்க்கார் புதுச்சேரியை இந்திய யூனியனுக்கு மாற்றிக் கொடுப்பார்கள் என்று நம்பலாம்.

இந்திய-பிரெஞ்சு சர்க்கார்கள் மிகுந்த நேசப்பான்மையில் இப்பிரச்னையில் கவனம் செலுத்தி வருகிறார்கள். இந்தியாவுக்கு பிரஞ்சு சர்க்கார் தூதராக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீ டேனியல் லெவியின் நியமனதை இந்திய சர்க்கார் அங்கீகரித் திருக்கிறார்கள் ஸ்ரீ மேனனிடம் பிரெஞ்சு சர்க்கார் மந்திரிகள் காடடிய மரியாதையும் இந்திய சர்க்காரிடம் அவர்கள் வைததிருக்கும் மதிப்பும் புதுச்சேரி இந்திய யூனியன் கைககு வந்துவிடும் என பதைக் காட்டுவதாக இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது.

கிரவுன் தியேட்டர், மதுரானை.

திங்கள் மாலை 6-15
இரவு 9 30 மணிக்கும்
சனி-ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்
சுவர்ணலதா
நஸீர்
இஸ்மாயில்
திரம்பட நடிக்கும்

பத்தாப் பதிய பாடல்!
காதற் கிளிய பாடல்கள்!
மனதை நடம் ஆடல்கள்!
காதல் வீரம் சோகம்
இன்னும் ஒவ்வொருவரும் வீரும்பும் அத்தனை அம்சங்களும் கொண்டது

"வாமிக் அஷ்ரா"
என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காண்பிக்கப்படும்
சனி-ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும், பாலர்களிக்கும், 1-ம் வகுப்புக்கும் அரை சார்ஜ்
மதுரையில 24 வாரங்கள் வெற்றிகரமாக ஒரே தியேட்டரில் காட்சியளித்த
பாங்கான காதல் திரை ஓவியம்
இன்று உங்களுக்குக் காட்சியளிக்கின்றது!
இடத்தக்க முந்துங்கள்!
டெலிபோன்: நிர். 3866

பாரசீக ஆயிலும் அந்நியர் ஆதிக்கமும்

ஒரே விதியுள்ள மசோதா

டெஹ்ரான், அக் 23

நேற்று பாரசீக பார்லிமெண்டில் ஒரே விதியுள்ள ஒரு மசோதா நிறைவேற்றப்பட்டது. பாரசீக ஆயிலுக்காக வல்லரசுகளிடும் போட்டியைச்சமாளிப்பதே இதன் நோக்கமாகும். 1946 வது வருடத்திய பாரசீக-ஸிய ஆயில் ஒப்பந்தம நிராகரிக்கபபட்ட போதிலும் மீண்டும் சமரசப் பேச்சு நடத்தவும் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆங்கிலோ-ஈரானிய ஆயில் கம்பெனி ஒப்பந்தமும் திருத்தியமைக்கப்படவும், பாரசீக வளை குடாவிலுள்ள பாஹ்ரான் தீவுகளை பாரசீகத்திற்குத் திருப்பிக் கொடுக்கவும் கோரப்படுகிறது. இம் மசோதாவின்படி இனி புதிதாக பாரசீக ஆயில் சம்பந்தமாக அந்நிய நாட்டினருடன் ஒப்பந்தம செய்வது தடுக்கப்படுகிறது.

மதுரையில் தமிழ திருநாள்

இரண்டு தினங்களாக நடைபெறும்

மதுரை, அக். 23

தமிழ்த் திருநாளின் முதல் வரவேற்புச் சபைக்கூட்டம் இன்று மாலை ஸ்ரீ மீனாட்சி கோவில் காரியாலயததல் ஸ்ரீ டி. சி. ஸ்ரீ நிவாசய்யங்கார் தலைமையில் நடைபெற்றது. சென்னை கல்வி அமைச்சர் ஸ்ரீ ஆச்சு அவினாசிலிங்கமும் கலந்து கொண்டார்.

திருநாள் இரண்டு நாட்கள் நடத்துவதென்றும் அப்பொழுது பொருட்காட்சி ஒன்று நடத்தவும் மதுரையிலுள்ள சிற்பங்கள் சித்திரங்கள் முதலிபவைகளைப் பற்றிய விபரங்களைத் தயாரித்து பிரசுரங்கள் மூலமாகவும் கலைகளை எல்லோருக்கும் விளக்கம் செய்ய தொண்டர்கள் மூலமாகவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. நிதி வசூல் பொருட் காட்சி கலை விளக்கம் பொது ஏற்பாடு முதலிப வேலைகளை கவனிக்க நகர பிரமுகர்களடங்கிய தனித்தனி உப கமிட்டிகள் அமைக்கபபட்டன.

திருநாள் செலவு போக மீதமுள்ள பணத்தை தமிழ்வளர்ச்சிக் கழகக் கலைகளஞ்சிய நிதிக்குக் கொடுக்க வேண்டுமென்றும் முன் மதுரையில நடந்த முத்தமிழ் மகாநாட்டில் எஞ்சிய பணததை இத்திருநாள் நிதிக்கு கொடுக்கும்படி கேட்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின. வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர் கட்டணம ரூ 25 ஆகவும் தமிழாசிரியர்களுககு மடடும் ரூ 1 ஆகவும நிர்ணயிக்கப்பட்டது.

நிர்வாக சபைக் கூட்டம் இனி ஒவ்வொரு சனிக்கிழமையும மாலை 6 மணிககு கோவில் தேவஸ்தானக் காரியாலயத்தில் நடைபெறும்.

பெண்கள் விடுதியில் புகுந்தார்

எதிரிக்கு 2 வருடச் சிறை

களுத்துறை, அக். 24

களுத்துறை வடக்கைச் சேர்ந்த ஜி. ஆதர் சில்வா என்பவர் வீட்டை உடைத்து உட்புகுந்து இரு சிறுமிகளை (வயது 11 ம் 12 ம்) பலாதகாரம் செய்ய முயன்றதாக குற்றஞ் சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கு களுததுறை ஜில்லா நீதபதி முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. களுத்துறையிலுள்ள பெண்கள் பாடசாலை யொன்றின் விடுதியில் ஒரு இரவு எதிரி புகுந்து இரு சிறுமிகளையும் பலாதகாரம செய்ததாகவும் சிறுமிகள் சப்தம் போட்டதால் எதிரி வெளியே ஓடியதாகவும் கோர்ட்டில் தெரிவிக்கப் பட்டது. நீதிபதி எதிரி குற்றவாளி எனக் கண்டு இரண்டு வருட கடுமியச் சிறைத் தண்டனை விதித்தார்.

5 கோடி பெறுமானம் உள்ள ஜவுளி

அஹமதாபாத்தில் தூங்கிக் கொண்டிருக்கிறது

அஹமதாபாத், அக். 22

தேசத்தின் பலவேறு இடங்களில் கலகம ஏற்பட்டு போக்குவரதது வசதி இல்லாமற்போக, அஹமதாபாத்தில் சென்ற ஒன்றரை மாத காலத்தில் சுமார் 50,000 ஜவுளி கடடுகள் விநியோகமாகாமல் குவிந்து விட்டன. இந்த வுளியின் உத்தேச விலை மதிப்பு சுமார் 5 கோடி ரூபாய் என்று கூறப்படுகிறது.

இதில் ஒரு கோடி ரூபாய் மதிபபுள்ள ஜவுளி கோட்டா பாக்கிஸ்தான் பிரதேசங்களுக்கு உரியது. பாக்கிஸதானில் பெர்மிட வைத்திருந்தவர்களிற் பெரும பாலராகிய முஸலிம் அல்லாதார் ஓடிப்போய் விட்டதால் விநியோக ஏற்பாடு முறிந்துவிட்டது. அஹமதாபாத்தில் சேர்ந்துவிடட ஜவுளிகளைப் போக்கு வரத்து வசதியுள்ள மற்ற மாகாணங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படடு வருகிறது 4500 ஜவுளி சட்டுகளுடன் ஒரு தனி கூட்ஸ்ரயில், டிலலிககும கிழக்கு பஞ்சாப்புக்கும் செல்ல ஏறபாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்றோர் தனி கூட்ஸவண்டி ஜவுளிசரக்குகளை அனுப்புவதற்குக் தீபாவளிக்கு முன்பு ஏற்பாடு செய்யப்படும்.

6 லட்சம் மதிப்புள்ள ஜவுளிகள் பிடிபட்டன

அஹமதாபாத், அக். 22

சென்ற ஒரு வாரமாகப் போலிஸார் ஜவுளி சம்பந்தமான கள்ள வியாபாரத்தைக் கண்டு பிடிக்க தீவிர முயற்சி எடுக்துக் கொண்டதால் சுமார் 6 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஜவுளி கைப் பற்றப்பட்டிருக்கிறது சுமார் 100 கடைகளும் இடங்களும் முற்றுகையிடப்பட்டன. மேலும் விசாரணை நடைபெற்று வருகிறது.

திராவிட ஆராய்ச்சிக் கழகம்

சென்னையில் நிறுவப்படும்

கொழும்பு, அக். 24

கூடிய சீக்கிரம் சென்னையில் தமிழ் இலக்கிய, கலாச்சார ஆராய்ச்சியும் திராவிட நாகரீக ஆராய்ச்சியும் நடத்துவதற்கு ஓர் கழகம் நிறுவப்படுமென்று சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலை தமிழ் ஆராய்ச்சிப் பகுதியைச் சேர்ந்த சங்கைக்குரிய எஸ். தனிநாயகம் தெரிவிக்கிறார்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட் டெட்டிற்காக, 1947-ம்ஆண்டு அக்டோபர் மீ 25உ இந்த பத்திரிகை 194A. தட்டாரத் தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org